
INDIA
BANGLADESH
PAKISTAN
MALDIVES
தமிழரசு
NEPAL
SPORTS
PEACE





# இந்த இதழில்...


★ ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி:
மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொலைக்காட்சியில் ஆற்றிய உரை ............ 2

★ ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி:
தொடக்க விழா ................................ 4

★ காவிரி நதி நீர்ப் பிரச்சினை:
–சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை.......... 12

★ தெற்காசிய விளையாட்டுப் போட்டி:
புகைப்படத் தொகுப்பு ......................... 19

★ வீராபுரம் துப்பாக்கிச் சுடும் தளம் திறப்பு விழா ......................................... 30

★ நொடிக்கொருமுறை பூத்த நந்தவனம்
–கொடியசைப்பு உருவக் காட்சி .................. 33

★ காவிரி நதி நீர்ப் பிரச்சினை:
–மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் புதுடெல்லி பயணம்................. 36

–மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுடன் சந்திப்பு ........ 37

★ விளையாட்டு அரங்கங்களில் அலைமோதியது அன்பர் கூட்டம் ....... 39

★ மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு.......................................... 41

★ தெற்காசிய விளையாட்டுப் போட்டி:
நிறைவு விழா ..................................... 43




இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

★ செய்யக்கூடிய வகையால், எக்காரணத் தாலும் விடாமல் செல்லுமிடமெல்லாம், அறச் செயலைப் போற்றிச் செய்ய வேண்டும்.





# தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2026

மார்கழித் திங்கள் : 17

மலர்: 26 இதழ்: 13

1.1.1996

விலை ரூபாய் : 3

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி:

# 'அமைதி, விடாமுயற்சி, செழிப்பு' வளர்ப்போம் நிலைப்படுத்துவோம்!

## –மாண்புமிகு முதல்வர் அவர்கள்–



(ஏழாவது தெற்காசிய கூட்டமைப்பு நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளை யொட்டி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தொலைக் காட்சியில் ஆற்றிய உரை 17.12.95)

இந்தியக் கலாச்சாரத்தின் பலகணியாய் விளங்கும், பாரம்பரியம் மிக்க சென்னை மாநகரில், ஏழாவது தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள் இந்த மாதம் 18 ஆம் தேதி முதல் 27 ஆம் தேதி வரை, சீரிய முறையில் நடைபெற உள்ளன என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விளையாட்டுப் போட்டிகள், உருவாக்கியுள்ள ஒரு மாபெரும் விளையாட்டு உணர்வும், ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையும், மக்கள் மனதில் குறிப்பாக இளைய தலைமுறையினரின் மனதில் நல்லதொரு தாக்கத்தை ஏற்படுத்தும் என்று உறுதியாக நம்புகிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தின், விளையாட்டு வரைபடத்தில் மட்டுமல்லாமல், சர்வதேச விளையாட்டு வரைபடத்திலும் எழில்மிகு சென்னை மாநகருக்கு ஒரு நிரந்தர இடத்தைப் பெற்றுத் தரும் இந்த எழுச்சியான விளையாட்டுப் போட்டிகளைக் கண்டுகளிக்க நீங்கள் அனைவரும் திரண்டு வர வேண்டும் என்று அன்போடு வரவேற்கின்றேன்.

பல துறைகளில் சாதனைப்படைத்து வரும் தமிழகம், இன்று விளையாட்டுத் துறையிலும், புதிய சாதனைகளைப் படைத்து வருகின்றது. இந்த விளையாட்டுகள், தமிழக மக்கள் மத்தியில் மட்டுமின்றி, இந்திய மக்கள் மனங்களிலும், உயர்ந்த எண்ணங்களையும் நல்ல சிந்தனைகளையும் சர்வதேச நல்லுணர்வையும், தேசிய ஒருமைப்பாட்டு உணர்வையும் அதிகரிக்கச் செய்ய நிச்சயமாக வழி வகுக்கும்.

இந்த விளையாட்டுப் போட்டிகள் இந்தியத் துணைக் கண்டத்தின் சார்பில் சென்னை மாநகரில் நடத்த வேண்டும் என்று நானே மத்திய அரசைக் கேட்டு அனுமதி பெற்றேன். அந்த நேரத்திலேயே இதற்குத் தேவையான சர்வதேசத் தரத்தில் அமைந்த, விளையாட்டு அரங்கங்கள், நவீன விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள், 2,000 விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும், நட்சத்திர ஓட்டல் வசதிகளுடன் தங்கும் விடுதிகள் மனங்கவரும் விதத்தில் தொடக்க விழா மற்றும் நிறைவு விழா ஆகியவற்றைப் பிரம்மாண்டமான முறையில் நடத்த, போர்க்கால அடிப்படையில் ஆயத்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் அதை நிறைவேற்ற எதிர்கொள்ள வேண்டிய சவால்களையும், சங்கடங்களையும் நாங்கள் பூரணமாக அறிந்திருந்தோம். குறித்த காலத்தில் எப்படியும் இந்தப் பணிகளை முடித்தே ஆக வேண்டும் என்று திட்டமிட்டு ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் இந்தப் பணியை மேற்கொண்டோம்.

கடந்த இரண்டு ஆண்டுகளில், டென்னிஸ் விளையாட்டரங்கம், ஆக்கி விளையாட்ட ரங்கம், நவீன நீர் விளையாட்டு வளாகம், பலமுனை உபயோக விளையாட்டு உள்

அரங்கம் ஆகியவை சர்வதேசத் தரத்தில் நவீன சாதனங்களுடன் Computer Operated Electronic Score Boardகளுடனும், முதல்தரத் தொழில் நுட்பங்களுடனும் அமைக்கப் பட்டுள்ளன. 560 குடியிருப்புகள் கொண்ட ஒரு எழில்மிகு விளையாட்டு நகரம் SAF Games Village ஒன்றும் உருவாக்கப் பட்டுள்ளது. தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் வரலாற்றில், இந்த விளையாட்டுப் போட்டிகளை ஒட்டி, சென்னை மாநகரில் மட்டும் தான் இப்படி ஒரு எழிலார்ந்த விளையாட்டு நகரம் உருவாக்கப்பட்டுள்ளது என்பது சரித்திரத்தில் நமக்கெல்லாம் பெருமையைத் தரும் ஒரு இனிய செய்தி ஆகும்.

கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்பில் விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள், ஏற்படுத்தப் பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரிய சாதனை ஆகும்.

தேசிய ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தும் வண்ணமும் இந்த விளையாட்டுப் போட்டி களுக்கு ஒரு தேசிய நிறத்தை அளிக்கவும் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் விளையாட்டுச் சுடர், இந்தியத் துணைக் கண்டத்தின் எல்லா மாநிலத் தலைநகரங்களுக்கும், கொண்டு செல்லப் பட்டுள்ளது. இந்தியாவைச் சுற்றி வரும் இந்தச் சுடரைக் கொண்டே, இந்த விளையாட்டுப் போட்டிகளின் சுடர், ஏற்றி வைக்கப்படுகிறது. மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்ம ராவ் அவர்கள், இந்த விளையாட்டுப் போட்டிகளை இம்மாதம் 18ந் தேதி அன்று தொடக்கி வைக்க அன்புடன் இசைந்துள்ளார்.

இதன்மூலம், காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை வாழும், ஒவ்வொரு இந்தியக் குடிமகனும், குடிமகளும், சென்னையில் தனது சார்பில், இந்த விளையாட்டுகள் நடைபெறுகின்றன. என்ற ஒரு ஒற்றுமை உணர்வை இந்தப் போட்டிகள் ஏற்படுத்தி உள்ளன. சென்னையில் வந்து தங்கி, தங்களது விளையாட்டுத் திறமைகளை வெளிப்படுத்தி நம்மை மகிழ்விக்க வரும் விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் தமிழகத்தின் கலாச்சாரம், பண்பாடு, வரலாறு, கலை ஆகியவற்றின்மீது ஒரு புதிய ஈடுபாட்டைக் கொள்ள இந்தப் போட்டிகள் வழிவகுக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். அதேபோல, தெற்காசிய நாடுகளான பங்களாதேஷ், பாகிஸ்தான், இலங்கை, மாலத்தீவு, பூடான், நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களோடு, நமது இந்திய மற்றும் தமிழக விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் சேர்ந்து தங்களது விளையாட்டுத் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், அந்த நாடுகளின் கலாச்சாரம் கலை, வரலாறு ஆகியவற்றின் மீது ஒரு புதிய ஈடுபாட்டை ஏற்படுத்தவும் இந்த நிகழ்ச்சி உறுதுணையாக விளங்கும். வெளிநாட்டி லிருந்து, சென்னை மாநகருக்கு வருகை தருபவர்கள், தமிழகத்தைப் பற்றிய பல இனிய நினைவுகளுடன் தாய்நாட்டிற்குத் திரும்பிச் செல்வார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

இந்த விளையாட்டுப் போட்டிகளின் தாரக மந்திரமான "அமைதி, விடா முயற்சி, செழிப்பு" ஆகியவற்றை வளர்ப்பதற்கும், நிலைப்படுத்துவதற்கும் இந்தப் போட்டிகள் வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை.

இருபதாம் நூற்றாண்டின் இந்தக் காலகட்டத்தில் நடைபெறும் மிக முக் கியமான ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் ஆரம்பமாக, கோலாகலமாக நடக்க உள்ள தொடக்க விழாவிலும், நிறைவு விழாவிலும் பங்குகொள்ளும் இந்தியாவின் பல்வேறு பாகங்களைச் சேர்ந்த, கலைவித்தகர்களின் கலை நிகழ்ச்சிகள், மாணவ மாணவிகளின் கொடி அணிவகுப்பு ஆகியவை உண்மையில் நமது கண்களுக்கு மாபெரும் விருந்து படைக்கப் போகின்றன.

எனவே, நமது கருத்துக்கும் கண்களுக்கும் விருந்தளிக்க உள்ள, சரித்திரச் சிறப்புப் பெற்ற, இந்த எழுச்சிமிகு ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளைக் கண்டு களிக்கத் தமிழக மக்களும் இந்திய மக்கள் அனைவரும் திரண்டு வர வேண்டும் என மீண்டும் அன்போடு வரவேற்கிறேன்.



## ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி:

# இதயத்தை ஈர்த்த இனிய தொடக்க விழா

தமிழ்நாட்டு விளையாட்டு வளர்ச்சித்துறையின் விடிவெள்ளியாகத் திகழும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தாழ்வுற்றிருந்த தமிழ்நாடு விளையாட்டுத்துறையைத் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமாக்கி மேம்படுத்தினார். சர்வதேசத் தரத்தில் ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கை அமைத்து, கூடைப்பந்து உள்ளுறை விளையாட்டரங்கம், நீச்சல் விளையாட்டரங்கம், பன்னோக்கு உள்ளுறை விளையாட்டரங்கம், ஆக்கி விளையாட்டரங்கம், டென்னிஸ் விளையாட்டரங்கம், துப்பாக்கிச் சுடும் தளம், நேரு பூங்கா விளையாட்டரங்கம் போன்றவைகளை அமைத்து ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளைப் பாரிலுள்ளோர் பாராட்டும் வண்ணம், கடந்த **18.12.1995** அன்று மாலை ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கில் தொடக்க விழாவில் தலைமைதாங்கி நடத்தினார்.

### விளையாட்டுத் தலைநகரம்

பல்லவருக்கும், பின்னர்

வெள்ளையருக்கும் தலைநகராக இருந்து பெருமை கொண்ட சென்னை நகரம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆற்றலால் இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரம் என்ற புதுச் சிறப்பைப் பெற் றுள்ளது. அதனை வலுப்படுத்து வதுபோல் *18.12.1995* அன்று நண்பகலிலிருந்தே ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழாவைக் காண ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கை மாபெரும் கூட்டம் முற்றுகை யிடத் தொடங்கியது. அரங்கின் அனைத்து வாயில்களிலும் அணிஅணியாய் மக்கள் கூட்டம். அணை கடந்த ஆற்று வெள்ள மென நீண்ட வரிசைகளில் மக்கள் வெள்ளம்.

வாயில்களில் வண்ணத் தோரணங்கள், வரவேற்புச் சுவரொட்டிகள், நெடிதுயர்ந்த வரவேற்பு வாயில்கள். நாற்பதாயிரம் இருக்கைகளும் மூன்று மணிக்கு முன்னதாகவே நிறைந்துவிட்டன.

**மங்கள இசை**

மூன்று மணியளவில் முதல் நிகழ்ச்சியாக ஷேக் சின்ன மவுலானா குழுவினரின் நாயன இசை மங்களமாகத் தொடங் கியது. நாதஸ்வரத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த வெளி நாட்டுப் புகைப்படக்காரர்கள், இசையின் இனிமையால் ஈர்க்கப் பட்டு, ஷேக் சின்ன மவுலா னாவை பல கோணங்களில், சுற்றிச் சுற்றி வந்து புகைப்படம் எடுத்துத்தள்ளினார்கள்.

## ● முதல் அட்டை சொல்லும் செய்தி:

வெள்ளையுடை அணிந்த *3,600* பள்ளி மாணவர்கள், மேடையின் எதிரேயிருந்த படிக்கட்டுகளில் தேனீக்கள், கூடுகளில் வந்தமர்வதைப் போல, அமர்ந்து கொண்டிருந் தார்கள். முதல் முயற்சியாகத் தங்கள் கைகளிலுள்ள வண்ணக் கொடிகளைக் காட்டி 'வெல்கம்' என்ற எழுத்துக்களால் அனை வரையும் வரவேற்றபோது, அரங்கத்திலுள்ளோர் அக மகிழ்ந்து ஆரவாரம் செய் தார்கள்.

**மாண்புமிகு முதல்வர் வருகை:**

கொடியசைப்புக் காட்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் வருவதை 'முதல்வரே வருக' என்று வண்ணக் கொடிகளால் எழுதிக் காட்டியபோது, மிகவும் பொருத்தமாக இருந்தது. உண்மையில் எல்லோரையும் கவர்ந்தார்கள்.

**விளையாட்டுச் சுடர்**

சென்னைக் கோட்டைக் கொத்தளத்தில் *28.10.95* அன்று, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களால் ஏழாவது தெற்காசிய விளை யாட்டுப் போட்டிச் சுடர் தொடங்கிவைக்கப்பட்டது. அந்தச் சுடர் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் நோக்கோடு





அரசின் சமூகநலத்துறை இணை அமைச்சர் திரு கே.வி. தங்கபாலு அவர்கள், இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு பா. சிவந்தி ஆதித்தன் ஆகியோர் வந்தனர்.

**பாயும் இளஞ்சிங்க இலச்சினை**

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் இலச்சினையினை இன்முகத் துடன் உயர்த்தி வலது கையில் சுடரேந்தி, பாயும் இளஞ்சிங்கம் அலங்கரிக்கப்பட்டு அரங்கினுள் ப்வனி வந்தது.

**விளையாட்டு வீரர்களின் மிடுக்கான அணிவகுப்பு:**

**வங்க அணி**

ஆறாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளைத் தங்கள் நாட்டில் நடத்திய வங்காளதேச விளையாட்டு வீரர், வீராங்கனைகள் 217 பேர் கொண்ட அணி முதலில் வந்தது. சாம்பல் நிற முழுக்கால் சட்டையும், கருப்புக் கோட்டும் அ்ணிந்திருந்தனர். துப்பாக்கிச் சுடும் போட்டியின் வெற்றி வீரர் திரு அதிபூர் ரெஹ்மான் தலைமையேற்று நடத்திவந்தார்.

**பூட்டான் அணி**

பூட்டான் நாட்டுத் தேசிய உடையணிந்த 17 பேர் கொண்ட அணிக்கு டேபிள் டென்னிஸ் அணியின் மேலாளர் செல்வி ஜிக்மே வாங்சு தலைமை தாங்கினார்.

**மாலத்தீவுகள் அணி**

45 வீரர்கள், 3 வீராங் கனைகளைக் கொண்ட அணி

இந்தியத் துணைக்கண்டத்தின் அனைத்து மாநிலங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு வலம் வந்து, ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்திற்கு, ஒலிம்பிக் வீரர் திரு வி. பாஸ்கரன் எடுத்துவந்து, மாண்புமிகு முதல்வரிடம் அளித்தார். திரு பாஸ்கரன், மாஸ்கோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் இந்திய ஆக்கி அணிக்குத் தலைவராகச் சென்று, வென்று தங்கப்பதக்கம் கொண்டுவந்த தமிழ்நாட்டு வீரர். தற்போதைய இந்திய ஆக்கி அணியின் பயிற்சியாளராக இருக்கிறார்.

இன்முகத்தோடு சுடரைப் பெற்றுக்கொண்ட முதல்வர் அவர்கள், அதனை, முன்னாள் இந்திய டென்னிஸ் விளையாட்டு வீரர் திரு ரமேஷ் கிருஷ்ணனிடம் வழங்கினார்.

**ஒலிம்பிக் வாழ்த்துச் செய்தி**

ஆஸ்திரேலியா ஒலிம்பிக் சங்கத்திலிருந்து வந்த வாழ்த்துச் செய்தியை இந்திய முன்னாள் ஒலிம்பிக் வீரர் இவான் ஜேக்கப் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் அளித்தார். மேடையில் இந்நிகழ்ச்சி நடை பெறும்போதே, அரங்கினுள் நீலநிறச் சீருடை அணிந்த மாணவ மாணவிகள், கைகளில் வெள்ளை மற்றும் நீலநிறக் கொடிகளைப் பறக்கவிட்டபடி வரவேற்பு வளையம் அமைத்துக் கொண்டிருந்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களை மேடைக்கு அழைத்துவந்தார். அவருடன் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள், மாண்புமிகு மத்திய

திரு ஹசன் ஷா தலைமையில் மிடுக்குடன் வந்தது.

**நேபாளம் அணி**

*130 வீரர்கள், 16 வீராங்கனைகள், 38 அலுவலர் களைக் கொண்ட நேபாள அணி, 189 பேர்களை உள்ளடக் கியது. இதற்கு ஹிரேங் சின்ஷா தலைமையேற்றார்.*

**பாகிஸ்தான் அணி**

பாகிஸ்தான் நாட்டினரால் தங்கமகன் என்றழைக்கப்படும் ஆக்கி வீரர் திரு ஷாபாஸ் அகமது தலைமையில் 147 வீரர்களும், 37 வீராங்கனை களும், 44 அலுவலர்களும் ஆக மொத்தம் 228 பேர் கொண்ட அணி நடந்து வந்தது.

**இலங்கை அணி**

*281 பேர் 165 வீரர், 52 வீராங்கனைகள், 54 அலுவலர் களைக் கொண்ட இலங்கை அணி, கர்னல் லக்ஷ்மண் சிங்கே தலைமையில் வந்தது.*

**இந்திய அணி**

இறுதியாக, ஆனால் உறுதி யாகப் பார்வையாளர்களின் கைகள் ஒலிக்கக் கம்பீரமாக, ஆறு தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொண்ட திருமதி ஷைனி வில்சன் தலைமையில் 203 வீரர்களும், 73 வீராங்கனை களும், 60 அலுவலர்களும் வீரநடை போட்டு வந்தார்கள். ஆண்கள் நீலநிறக் கோட்டும் இளமஞ்சள் கால்சட்டையும், பெண்கள் அதே நிறக் கோட்டும் இளமஞ்சள் மைசூர் சில்க் சேலையும் அணிந்திருந்தார்கள். தங்கமங்கை பி.டி. உஷா முன்னால் வந்தார்.

**விளையாட்டுக் கொடி**

விளையர்ட்டு வீரர்களின் அணிவகுப்பைத் தொடர்ந்து, காவல்துறை வீரர்கள் 30 பேர் முரசொலிக்க, தெற்காசிய விளையாட்டுக் கொடியை நான்கு மூலைகளிலும் நான்கு பேர் பிடிக்க, பின்புறம், முன்புறம் இரு பக்கவாட்டிலும் 10 பேர் பிடித்துவந்த காட்சி யிலேயே வீரத்தின் வீச்சு வெளிப்பட்டது. பார்த்துக் கொண்டிருந்தவர்கள் பாராட்டி னார்கள். கொடியில் அமைதி யின் சின்னமான வெள்ளைப் புறா மற்றும் ஐந்து ஒலிம்பிக் வளையங்களும், அதன்கீழ் அமைதி, தளரா முயற்சி, முன்னேற்றம் என்ற சொற்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

**முதல்வரின் முழு முயற்சி**

அடுத்து, இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர், திரு சிவந்தி ஆதித்தன் அவர்கள் வரவேற்பு ரையாற்றினார். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் முழு முயற்சியால்தான், இந்த ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் நடக்கிறது என்று புகழ்ந் துரைத்தார்.

**வென்றிடும் நம் வீரருக்குத் தந்திடுவோம் ரொக்கப் பரிசு.**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள்





பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை ஏழாவது தெற்காசிய விளை யாட்டுப் போட்டிகளைத் தொடக்கி வைக்குமாறு கேட்டுக் கொண்டார். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் போட்டிகளைத் தொடங்கி வைத்தார்.

**பீரங்கி முழக்கம்**

மைதானத்தின் ஒரு மூலையிலிருந்து மூன்றுமுறை பீரங்கி வெடித்தது. தெற்காசிய ஒலிம்பிக் கொடிகள் மைதானத்தில் ஏற்றப்பட்டன.

**ஹெலிகாப்டர் மலர்த் தூவல்**

ஒரு பச்சை நிற ஹெலிகாப்டர் அரங்கின் மேல் தெற்காசியப் விளையாட்டுக் கொடியை பறக்கவிட்டபடி முன்னால் போக, தொடர்ந்து மற்றொரு ஹெலிகாப்டர், விளையாட்டரங்கில் பூமழை பொழிந்தது.

**அமைதிப் புறாக்கள், வண்ண பலூன்கள்**

நூற்றுக்கணக்கான புறாக்கள், பல வண்ண பலூன்கள் உயரே எழும்பி பறந்து நீலவானத் திற்குப் பல வண்ணங்களைப் பரிசளித்தன.

**விளையாட்டுச் சுடர்**

விரைவு ஓட்டப்பந்தய வீரர் திரு ஞானசேகரன் அர்ஜுனா விருது பெற்ற வீராங்கனை அனுசுயாபாய் ஆகியோர் ஏந்திவந்த சுடரை, பத்மஸ்ரீ விருது பெற்ற திரு சார்லஸ் புரோமியோ பெற்றுக்

ஆங்கிலத்தில் உரையாற்றினார். தங்கப்பதக்கம் பெறும் இந்திய வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.15 ஆயிரமும், வெள்ளிப்பதக்கம் பெறுபவருக்கு ரூ.10 ஆயிரமும், வெண்கலப் பதக்கம் பெறு வோருக்கு ரூ.5 ஆயிரமும், தங்கப்பதக்கம் பெறும் இந்திய அணிக்கு ரூ.60 ஆயிரமும், வெள்ளிப்பதக்கம் பெறும் அணிக்கு ரூ.40 ஆயிரமும், வெண்கலப்பதக்கம் பெறும் அணிக்கு ரூ.20 ஆயிரமும் வழங்கப்படும் என்று அறிவித்தார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த உடன் இந்திய வீரர், வீராங் கனைகளிடையே உற்சாகம் பெருகிற்று.

தொடர்ந்து, டெல்லியில் இந்திய ஒலிம்பிக் சங்கம் ரூ.2 கோடி மதிப்பீட்டில் கட்டி வரும் ஒலிம்பிக் பவனுக்குத் தமிழக அரசு சார்பில் ரூ.50 இலட்சம் வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

கொண்டார். பின்னர், அவர் மூன்று ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்ட திரு வி.ஜே. பீட்டரிடம் தர, திரு பீட்டர் தடகளப் போட்டி வீரர் திரு கே. நடராஜனிடம் சுடரைக் கொடுத்தார். பிறகு, சுடர், கூடைப்பந்தாட்ட வீரர் திரு செந்துரேஸ்வரன், கைப்பந்து வீராங்கனை சுமதி, 1968-ஆம் ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டு வீரர், திரு கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தொடரோட்டம் மூலம் பெறப்பட்ட சுடர் இறுதியாக, 10 ஆண்டுகளில் இந்தியக் கைப்பந்து அணியில் ஆடி, அர்ஜுனா, துரோனாச்சார்யா விருது பெற்ற திரு ரமணாராவ் பெற்றுக்கொண்டார். அவர் ஒலிம்பிக் மேடையில் சுடரை ஏற்றிவைத்தார். 50 குழாய்கள் வழியாக எரிவாயு 40 அடி உயரத்திற்கு மேலேறி அங்கே அமைக்கப்பட்டிருந்த அகண்ட விளக்கில் தீச்சுவாலையாய் மாறியது. இச்சுடர், 10 நாட்களுக்கு ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் முடியும் வரை தொடர்ந்து அணையாமல் நின்று எரியும்.

### விளையாட்டுப் போட்டிப் பாடல்

சென்னையில் நடைபெறும் இப்போட்டிக்கென, புலவர். புலமைப்பித்தன் இயற்றி, திரைப்பட இசையமைப்பாளர் திரு சிற்பி இசையமைத்த பாடலை திரைப்படப்பின்னணிப் பாடகர்கள் திரு மனோ, அனுராதா பொடுவால், சித்ரா, ஸ்வர்ணலதா ஆகியோர் மேடையில் தோன்றிப் பாடினார்கள்.



### உறுதிமொழி

இந்திய அணியின் தலைவி திருமதி பி.டி. உஷா, அனைத்து வீரர், வீராங்கனைகளின் சார்பாக, வலது கையை உயர்த்தி உறுதிமொழியை ஏற்றுக் கொண்டார். பின்னர், அனைத்து நாடுகளின் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் மைதானத்திலிருந்து வெளியேறி அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த இருக்கைகளில் அமர்ந்து கொண்டனர்.

### நினைவுப் பரிசு

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இன்முகங்கொண்டு, பாய்ந்தோடும் இளஞ்சிங்க வடிவ நினைவுப் பரிசு ஒன்றைக் கண்ணாடிப் பேழையில் வைத்து மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அளித்தார். அப்போது கொடியசைப்புக் காட்சியில் இரண்டு தலைவர்களின் உருவத்தையும் அருகருகே காட்டி மகிழ்ந்தார்கள்.

## கலை நிகழ்ச்சிகள்:

### கரகம், காவடி, பொய்க்கால் குதிரை

கலை நிகழ்ச்சிகளில் முதல் நிகழ்ச்சியாகத் தமிழ்நாட்டுக் கிராமியக் கலை நிகழ்ச்சியான கரகம், காவடி, பொய்க்கால் குதிரை, நடனங்கள், நூற்றுக் கணக்கான ஆண்களும், பெண்களும், நூற்றுக்கணக்கான நாதஸ்வரக் கலைஞர்களின் இசைக்கேற்ப மைதானத்தில் நிறைந்து ஆடினார்கள். மக்களும் ஆடினர். மட்டில்லா மகிழ்ச்சி கொண்டனர். காவடி கலைஞர்களும், கரகாட்டக்காரர்களும் மனிதகோபுரம் அமைத்து அரங்கின் உயரத்தை அளவிட முயன்றது அழகாக இருந்தது.

### சிங்கம் யாக் எருமைகள்

மைதானத்திலிருந்து தமிழ் நாட்டுக் கலைஞர்கள், பார்வையாளர்களின் பாராட்டோடு விடைபெற்றவுடன், இரண்டு சிங்கங்களும், இரண்டு கருப்பு

யாக் எருமைகளும் மைதானத்துள் நுழைந்துவிட்டன. அந்தச் சிங்கங்கள் புரண்டு புரண்டு ஆடியபோதும், அந்த யாக் எருமைகளை ஒரு கலைஞர் பிடிக்கப் படாதபாடு பட்டதும் பார்ப்போர்க்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. சிக்கிம் மற்றும் அருணாச்சலப் பிரதேசத்திலிருந்து வந்த நடனக் கலைஞர்களின் பிரமிப்பூட்டும் நிகழ்ச்சி. இங்கே இரண்டு சிங்கங்கள் வந்துள்ளன. ஒன்று சிங்கநிகர் புரட்சித் தலைவியைக் காணவந்துள்ளது. மற்றொன்று பாரதப் பிரதமரின் பெயரிலேயே சிங்கம் உள்ளதால் அவரைக் காண சென்னை வந்துள்ளது என்று வருணனையாளர் கவியரசர் இளந்தேவன் சொன்னபோது, அரங்கமே வெடிச்சிரிப்பில் வீழ்ந்தது.



**லெசியம்**

மராட்டிய மன்னன் சிவாஜி, தன் வீரர்கள் போரில்லாக் காலங்களில் வாளாவிருந்து சோம்பியிருந்து விடக்கூடாது என்பதற்காக, உடற்பயிற்சிகளோடு சில நடனங்களை அமைத்துத் தந்துள்ளான். மராட்டிய மாநிலத்திலிருந்து 360 ஆண்களும், பெண்களும் கைகளில் தாளக் கருவிகளைக் கொண்டு, பெண்கள் கருமஞ்சள் நிறத்தில் சேலையும், ஆண்கள் வெள்ளை நிறத் தலைப் பாகையும், உடையும் அணிந்து, ஒரு விநாடியைக் கூட வீணாக்காமல் விறுவிறுப்பாக ஆடினார்கள். சாமந்திப்பூ, தீபச்சுடர், ஏழு வட்ட வளையங்கள், அமைத்துக் காட்டினார்கள். இசைக்கேற்ப இவர்கள் ஆடினார்களா? இல்லை இவர்களின் நடனத்திற்கேற்ப இசைக்கப்பட்டதா? என்று சிந்திக்கவைத்த இவர்களின் திறத்தைக் கண்டு பாராட்டாதவரே இல்லையெனலாம்.

**சரி நடனம்**

இராஜஸ்தான் மாநிலத்தில் மலர் கொய்யும் மகளிர் நடனமான சரி நடனத்தை, சென்னையைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மாணவிகள், மஞ்சள், பச்சை, சிவப்புநிற இராஜபுத்திரப் பெண்கள் உடையில் நளினமாகக் காட்சியளித்து அருமையாக ஆடினார்கள். ஜே.ஜே என்ற ஆங்கில எழுத்துக்களை வடிவமைத்துக் காட்டினார்கள். அப்போது கொடியசைப்புக் காட்சியினர், ‘ஸ்போர்ட்ஸ் பார் பீஸ்’ என்று காட்டியபோது மிகவும் பொருத்தமாக இருந்தது.

**வாங்லா நடனம்**

மேகாலயா மாநிலத்திலிருந்து வந்த கலைஞர்கள், அங்கே வழக்கத்திலுள்ள அறுவடை நடனத்தைச் சென்னை மக்களுக்கு ஆடிக்காட்டினார்கள். அவர்களின் இசையோடு, நடனமும் இணைந்து இனிமையாக இருந்தது.

**செராவ் மூங்கில் நடனம்**

பெண்கள், வெள்ளை, கருப்பு, சிவப்பு உடைகள் அணிந்து ஆண்கள் சிறு குச்சிகளின் முனையில் சிவப்புப் பூக்களை தலையில் பொருத்திய படி காட்சியளித்தார்கள். ஆண்கள் இரண்டு கைகளிலும் நீளமான மூங்கில் கழிகளைக் கொண்டு சதுர வடிவில் அமர்ந்து கழிகளை அசைக்க, அசைவின்போது ஏற்படும் இடைவெளிகளில் அழகிய அந்த மகளிர் குதித்து குதித்து மிகவும் கவனமாக ஆடினார்கள்.

**பிஹூ நடனம்**

அஸ்ஸாம் மாநிலத்திலிருந்து வந்த நடனக் குழுவினர், இந்த பிஹூ நடனத்தை ஆடினார்கள். பைசாகி நாளில் புத்தாண்டு வாழ்த்துக்கூற ஆடப்படும் ஆட்டம். இதில் மஞ்சள் புடவை, சிவப்பு நிற ரவிக்கைகள் அணிந்து அழகாக மீனாட்சிக் கொண்டையிட்டு, கைகளில் வெள்ளை நிற வளையல்களை மாட்டியிருந்தார்கள். ஆண்களோ மஞ்சள் அரைக் கை சட்டையும், வெண்ணிற வேட்டியும், கையில் கொம்பு, மத்தளம் கொண்டு இணைந்து ஆடினார்கள்.

**கவுட் மரியாஸ் நடனம்**

மத்தியக் பிரதேசக் கலைஞர்கள் ஆடிய இந்த நடனம் மிகவும் சிறப்பாக இருந்தது. பழங்குடியினரின் நடனமான இதில், ஆண்கள் தலையில் வேட்டையாடிய பறவைச் சிறகுகளையும், பெண்கள் தாய் வீட்டிலிருந்து கொண்டுவந்த சீதனத்தையும் கட்டியிருந்தார்கள். பல நிறங்களில் புடவையணிந்து பாம்பு போல நெளிந்தும், வளைந்தும், வட்டமிட்டும், பக்கத்திலுள்ளவரின் தோளின் மீது கைகளை வைத்து முன்னும் பின்னும்,

குனிந்தும் நிமிர்ந்தும் ஆடினார்கள்.

**லம்பாடி நடனம்**

ஆந்திர மாநில நடனமான லம்பாடி நடனத்தைச் சென்னையைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மாணவிகள் ஆடினார்கள்.

கண்ணாடி வேலைப் பாடுகள் செய்யப்பட்ட பச்சை, நீலம், மஞ்சள், கருப்பு வண்ண பாவாடைகள் அதற்கேற்ற ரவிக்கைகள் கடைசல் செய்த வெள்ளை வளையங்கள் முழுக்கையும் நிரம்ப, ஆயிரம் மாணவிகள் மைதானம் முழுவதும் நிறைந்து ஆடியது. அருமையான காட்சி.

**தண்டியா ராஸ்**

குஜராத் மாநிலத்தில் நவராத்திரியின் போது ஆடப்படும் நடனம். ஆண்கள் தலைகளில் கலை வேலைப்பாடுகள் நிறைந்த குல்லாய், நீல நிறச் சட்டை, மடிப்புடன் சுருக்கம் வைத்து தைக்கப்பட்ட வெள்ளை மேல் அங்கியுடன் கைகளில் சிறு குச்சிகள் கொண்டு ஆடினார்கள். பெண்கள் வண்ண உடைகளில் ஆண்களுடன் இணையாக ஆடினார்கள். அழகிய குடையொன்றைக் குழுவின் நடுவிலிருந்த ஒருவர் பிடித்து சுழற்றியபடி ஆடி வந்தார். தரையில் படுத்தும், எழுந்தும் ஆடினார்கள்.

**பூங்சலம்**

மணிப்பூரைச் சேர்ந்த மத்தளங்களுடன் வந்த நூற்றுக் கணக்கான ஆண்கள் அந்தரத்தில் குதித்துக் குதித்து ஆடி அனைவரையும் ஆட வைத்துவிட்டார்கள். ஆட்டமா அது? அழகுணர்வு கொண்ட உடற்பயிற்சி! அரங்கத்திலுள்ளோரை அதிசயிக்க வைத்த அற்புத நிகழ்ச்சி!

**ஆடும் வாத்தியங்கள்**

தமிழ்நாட்டின் சிறப்புமிக்க நூற்றுக்கணக்கான நாதஸ்வரக் கலைஞர்கள், கொம்பு, எக்காளம் தப்பட்டையாட்டம், கர்நாடக மாநிலத்திலிருந்து வந்த தோலுகுனிதா, மராட்டிய மாநில ஜான்சி இப்படி காண்போரின் கண்ணுக்கும் காதுக்கும் விருந்து படைத்தார்கள்.

**சாஸ்லா விளக்கு நடனம்**

இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்த அரங்கத்தின் விளக்குகள், நடனத்தில் மனத்தைப் பறிகொடுத்து, ஒளி உமிழ்வதை மறந்தனவோ என்று நினைக்கும்படியாக அணைந்து இருட்டானது. ஆகாயத்தில் அமாவாசையன்று புள்ளிவைத்தாற் போல் மின்னுகிற நட்சத்திரங்கள் தரையிறங்கி வந்தது போல விளக்குகள். 54 கிலோ எடை கொண்டவை. அவைகளைச் சுமந்து சுழன்று ஆடி வந்தவர்கள் அழகிய பெண்கள். உத்தரப் பிரதேசத்திலிருந்து வந்தவர்கள். அதனைத் தொடர்ந்து தாங்களும் சளைத்தவர்களல்ல என்று நூற்றுக்கணக்கான தமிழ்நாடு காவல்துறையினர் வெள்ளையுடையில் இரு கைகளிலும் தீப்பந்தம் எடுத்து வந்து வியூகம் அமைத்து கொடுத்த காட்சி மிகவும் ரசிக்கும்படி இருந்தது. உண்மையிலேயே காணக் கண் கோடி வேண்டும். பார்வையாளர்கள் தங்கள் மகிழ்ச்சியைப் பாராட்டை ஒலியெழுப்பித் தெரிவித்தார்கள்.

பாரதப் பிரதமரை வழி அனுப்பிவிட்டு வந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அடுத்து நடைபெற்ற வாணவேடிக்கை முடியும் வரை அரங்கில் இருந்து கவனித்தார்.

கிட்டத்தட்ட பொதுமக்கள் 40 ஆயிரம் பேர் கண்டுகளித்தனர். பாராசூட்டிலிருந்து வீரர்கள் குதிக்கும் நிகழ்ச்சி பலத்தக் காற்று வீசியதால் நடைபெறவில்லை.

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் இனிமையாகத் தொடங்கியது.

சென்னையில் முதன் முதலில் நடைபெறும் இவ்விளையாட்டுப் போட்டிகள் இதுவரை நடந்த போட்டிகளில் முதன்மையான நிகழ்ச்சியாக இருக்கும் என்பதில் இருவேறு கருத்துக்கள் இல்லை. இத்துணை கலை நிகழ்ச்சிகளையும் ஓரிடத்தில் பார்க்கும் வாய்ப்பைச் சென்னை மக்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கொடுத்துள்ளார் என்பது நினைவில் நிற்கும் நிகழ்ச்சிதானே!

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**எஸ்.கே.எம். அசோகன்**



# காவிரி: தமிழகத்தின் உயிர்மூச்சுப் பிரச்சினை

## நடுவர் மன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த மத்திய அரசு உடனடியாகத் தலையிடுக!

**28.12.1995 அன்று தமிழகச் சட்டமன்றப் பேரவையில் காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து, தமிழக அரசின் சார்பில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் மீது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:**

மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே!

தமிழகத்தின் நெற்களஞ்சிய மான, காவிரி டெல்டாப் பகுதி யில், ஆண்டாண்டுக் காலமாக, நாம் காவிரி நதி நீரைப் பயன்படுத்தி, வேளாண் தொழிலை மேற்கொண்டு வந்த உரிமைகள், சிறிது சிறிதாக மறுக்கப்பட்டு இன்று காவிரி நதியில் இருந்து தமிழகத்தின் வேளாண் தொழிலுக்குக் கிடைக்க வேண்டிய பங்கு நீரைக் கூட இழக்கின்ற ஒரு துர்ப் பாக்கியமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம் என்பது ஒரு வேதனைக்குரிய விஷய மாகும்.

மரபுரிமைப்படி இயல்பாக நமக்குக் காவிரி நதிநீர், பாசனத்திற்குக் கிடைக்கின்ற சூழ்நிலை மாறி நமக்குரிய பங்கு நீரை நாம் வற்புறுத்திக் கேட்டுப் பெறுகின்ற சூழ்நிலைக்கும் நீதி மன்றங்களுக்குச் சென்று ஆணையைப் பெறுகிற சூழ் நிலைக்கும் அவ்வாறு பெற்ற ஆணை மதிக்கப்படாத நிலையில் பாசன நீரின்றிப் பயிர்கள் வாடிவிடாமல் காப்பாற்ற மத்திய அரசை வற்புறுத்தி நமது உரிமைகளைப் பெறுகின்ற சூழ்நிலைக்கும் இன்று தள்ளப் பட்டிருக்கிறோம்.

தமிழகத்தின் ஜீவாதார உரிமைப் பிரச்சினையான காவிரி நதிநீர்ப் பிரச்சினையின் உண்மைத் தன்மையை உலகிற்கு உணர்த்தவும், மத்திய அரசு, கர்நாடக அரசை வற்புறுத்தி காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையின்படி தமிழகத்திற்கு வழங்க வேண்டிய 205 TMC அடி நீரை அந்த ஆணையில் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் விட வேண்டும் என்பதை வற்புறுத்தியும், 1993-ஆம் ஆண்டு நான் உண்ணாவிரதம் மேற் கொண்டதை இந்த இடத்தில் நினைவுகூர்வது பொருத்த முடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

கர்நாடக மாநிலம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் தொடங்கி அடுத்த ஆண்டு மே மாதம் வரைக்கும் உட்பட்ட காலகட்டத்தில், காவிரி நதியில், 205 TMC அடி நீரை விட வேண்டும் என்பதோடு அந்த மாதங்களில் ஒவ்வொரு வாரத்திலும், வழங்க வேண்டிய நீரின் அளவையும், ஒரு அட்டவணை இட்டு, நடுவர் நீதிமன்றம், இடைக்கால ஆணை வழங்கியுள்ளது. அது மட்டு



**பாசன நீரின்றி வாடுகின்ற பயிர்களின் நிலையை நேரில் கண்டறிந்திட, தஞ்சை மாவட்டத்திற்கு 30.12.95 அன்று ஹெலிகாப்டர் மூலம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் விரைந்தார். பட்டுக்கோட்டைப் பகுதிக்குச் சென்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் நெற்பயிர்களைப் பார்வையிட்டு, மாண்புமிகு அமைச்சர்கள், அரசு அலுவலர்களுடன் அதே இடத்தில் ஆலோசனை நடத்தினார்.**

மன்றி, மாதத்தின் ஒவ்வொரு வாரத்திலும் கொடுக்க வேண்டிய நீரின் அளவையும் குறிப்பிட்டு அதில் ஏதேனும் குறைவு ஏற்பட்டால், அந்த மாதத்தின் இறுதி வாரத் தவணையில், அந்தக் குறைவை முழுமையாக ஈடுசெய்ய வேண்டும் என்றும் காவிரி நதிநீர் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையில், மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இன்று வரை கர்நாடக மாநிலம் அந்த ஆணையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதோடு ஆணையை மதித்து அதன்படி தண்ணீரைத் தமிழகத்திற்கு வழங்கவும் இல்லை. ஆனால் இயற்கை அன்னையின் அருள் நமக்குக் கடந்த நான்காண்டுக் காலமாகப் பரிபூரணமாகக் கிடைத்திருந்த காரணத்தால், கர்நாடக மாநிலம் காவிரியில், நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரை விடாத போதிலும் தேவையான பாசன நீர் நமக்குக் கிடைத்தது.

இந்த ஆண்டு தென்மேற்குப் பருவ காலத்தில், கர்நாடக மாநிலம், தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டிய நீரைக் கொடுக்காத காரணத்தாலும், வடகிழக்குப் பருவ மழை பொய்த்துப் போனதாலும் மேட்டூர் அணையின் நீர் மட்டம், வெகுவாகக் குறைந்து, நமக்குப் பாதகமான சூழ்நிலைகள் ஏற்பட்டன. அதனால், குறுவை மற்றும் சம்பா சாகுபடிகளில் பல இலட்சம் ஏக்கர் நிலப் பரப்பில், வேளாண்மை மேற்கொள்ள இயலவில்லை. மேலும், தற்போது 13.3 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப் பட்ட பயிர் தண்ணீர் இன்றி வாடிக் கொண்டிருக்கிறது. காவிரி நதியில், நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர் கிடைக்கவில்லையெனில், நெற் பயிர் முழுவதும் பாழாகிவிடும் பாதகமான சூழ்நிலை ஏற் பட்டுள்ளது.

இந்தப் பாசன ஆண்டு தொடக்கத்திலிருந்தே, நம் மாநிலத்தின் வேளாண்மை ஏற்பாடுகளையும் பாசன ஏற்பாடுகளையும் எங்கள் அரசும், நாங்களும், கூர்ந்து கவனித்து வந்துள்ளோம். கர்நாடக மாநிலம், நமக்கு உரித்தான நீரை, இந்த ஆண்டு



**தண்ணீர் இன்மையால், தள்ளாடுகின்ற பயிர்களைப் பார்வையிட ஹெலிகாப்டர் மூலம் பட்டுக்கோட்டை கிராமப் பகுதிகளுக்குச் சென்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஊசலாடும் நிலையில் உள்ள பயிர்களையும், வயல்களையும் பார்வையிட்டு, விவசாயப் பெருமக்களிடம் நிலைமைகளைக் கேட்டறிந்தார்.**

காவிரியில் விடாத காரணத்தாலும், நமது மாநிலத்தில், காவிரியில் தண்ணீர் வரத்து குறைந்த காரணத்தாலும், இந்தப் பாசன நீர்ப் பற்றாக்குறைகளை மத்திய அரசுக்கு அவ்வப்போது சுட்டிக்காட்டி, இந்த நீர்க் குறைவைக் கர்நாடக அரசு ஈடு செய்ய, நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தொடர்ந்து வற்புறுத்தி வந்துள்ளோம்.

மேலும், கர்நாடக மாநில நீர்த்தேக்கங்களின் நீர் இருப்பு நீர் வரத்து மற்றும் நமக்கு விட வேண்டிய நீர் அளவின்படி கணிப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நமக்குரிய நீரைக் காவிரியில் திறந்து விடுகிறார்களா என்பதைக் கண்காணிக்க ஒரு கண்காணிப்புக் குழு ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய அரசுக்குப் பல முறை, நேரிலும், கடிதங்கள் மூலமும், நாம் தொடர்ந்து வற்புறுத்தி வந்துள்ளோம்.

நிர்வாக முறைகளுக்கு ஏற்ப தகுந்த பரிகாரங்களையும் சட்ட முறைப்படி, நியாயம் கிடைக்கின்ற எல்லா வழிவகைகளையும் ஆராய்ந்து இந்த அரசு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் இந்தப் பிரச்சினையை அணுகி உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே, *1992*-ஆம் ஆண்டு, கர்நாடக அரசு, நடுவர் மன்ற இடைக்கால ஆணையை அமல் நடத்தத் தவறியதால், அதை நிறைவேற்றும்படி, ஆணையிட வேண்டும் என்று தமிழக அரசு உச்ச நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தது. அதன் பின், இடைக்கால நிவாரணம் கோரி கர்நாடகம் வழங்கத் தவறிய நீர்ப் பற்றாக்குறையை, ஈடுசெய்ய வேண்டும் என்றும் தமிழ்நாட்டுக்கு உரிய நீரை, வழங்கிய பின்னர் தான் கர்நாடக மாநிலம் தனது நீர்த் தேக்கங்களில் நீரைத் தேக்கி வைத்துக் கொள்ளவேண்டும் என்றும் ஆணை வழங்கக் கோரி இடைக்கால மனு, Interlocutory Petition ஒன்று, தமிழக அரசால், *1.8.1995*-இல் தாக்கல் செய்யப் பட்டது. தற்போது நடப்புப் பருவத்தில், *13.3* இலட்சம் ஏக்கர் பரப்பளவில் உள்ள பயிரினைக் காப்பாற்ற *30* TMC அடி நீரையாவது உடனடியாக வழங்குமாறு கர்நாடக மாநிலத்திற்கு ஆணையிட, ஒரு அவசர மனு, Emergent petition உச்ச நீதி மன்றத்தில் *11.12.1995* அன்று



**"விக்கிரமம்" என்ற கிராமத்தில் வாடிய பயிர்களைக் கண்டு வாடிய நிலையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.**

தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், காவிரி டெல்டாப் பகுதியில், பயிரின் நிலைமை குறித்து தனது கவலையைத் தெரிவித்து இந்த மனுவைக் காவிரி நடுவர் மன்றம் உடடினயாக விசாரித்து தகுந்த நிவாரணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று **14.12.1995** அன்று தீர்ப்பு வழங்கியது. இரண்டு மாநில முதல்வர்களும் ஒன்று கூடி இது குறித்துப் பேச வேண்டும் என்றும் காவிரி நதி நீர் நடுவர் மன்றம் உடனடியாக நிலைமைகளை ஆராய்ந்து தக்க ஆணைகளை வழங்க வேண்டும் என்றும் ஆணையிட்டது. உடனடியாக நான் டெல்லிக்குச் சென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து, தமிழகத்தின் இக் கட்டான சூழ்நிலைகளை எடுத்துரைத்தேன். 30 TMC அடி பாசன நீர் தமிழகத்திற்குக் கிடைக்கவில்லை என்றால் கிட்டத்தட்ட 800 கோடி ரூபாய் பெருமானம் உள்ள விவசாய விளைபொருள் உற்பத்தி பாதிக்கப்படும் என்பதோடு இலட்சக்கணக்கான விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும், பாதிக்கப்படுவார்கள் என்பதையும் எடுத்துரைத்தேன். அப்பகுதிகளில் வறட்சி ஏற்படும் என்பதையும் வறட்சியினால் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்படக் கூடும் என்ற எனது நியாயமான அச்சத்தையும் தெளிவாக எடுத்துரைத்தேன். முதல் பயிரில் தட்டுப்பாடு ஏற்பட்ட சூழ்நிலையில் மீண்டும் சம்பாப் பயிரில் இழப்பு ஏற்பட்டால் தமிழக விவசாயிகள் தங்கள் நிலங்களில் இட்ட முதலீட்டைக் கூடப் பெற முடியாமல், இழப்புக்கு ஆளாவார்கள் என்பதையும் எடுத்தரைத்தேன். அதற்கு ஆவன செய்வதாகக் கூறிய மாண்புமிகு பிரதமர் அவர்கள், உடனடியாக மாண்புமிகு மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களுக்குத் தகவல் அனுப்பினார்கள்.

மேலும், உச்ச நீதிமன்றம் தெரிவித்த கருத்துப்படி, **15.12.1995** அன்று கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்களோடு, தொலைபேசியில் தொடர்பு கொண்டு இது குறித்துப் பேச, நான் மேற்

கொண்ட முயற்சிகள், பயனளிக்காமல் போய்விட்டன. நமக்குச் சாதகமான பதிலும் கிடைக்கவில்லை. இதற்கிடையில், மத்திய நீர்வளத்துறை அமைச்சர் உடனடியாக ஒரு கூட்டத்தை டெல்லியில் கூட்டுவதாக, எங்களுக்குத் தகவல் வந்தது. இந்தக் கூட்டத்தை, எப்போது வைத்துக் கொள்ளலாம் என்று கேட்டதற்கு நான் **19.12.1995** அன்றே வைத்துக்கொள்ளலாம் என்று தகவல் கூட அனுப்பினேன். ஆனால் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள கர்நாடக மாநில முதலமைச்சர் முன் வராததால், இந்தக் கூட்டம் இன்று வரை நடைபெறவில்லை. இதற்கிடையே தமிழக அரசு **14.12.1995** அன்று காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தில் உச்ச நீதி மன்றத் தீர்ப்புப்படி, தாக்கல் செய்த மனு விசாரணைக்கு மேற்கொள்ளப்பட்டு தேவைப்பட்ட புள்ளி விவரங்களும் நடுவர் மன்ற நிபுணர்களிடம் வழங்கப்பட்டன.

கர்நாடக மாநிலத்தில், செப்டம்பர் மாதத்திற்குப் பின் தென் மேற்குப் பருவ மழை வலுத்ததால், கர்நாடக மாநிலம் நம் மாநலத்திற்கு உரிய நீரை நமக்கு அளிக்கும் என்ற நியாயமான எதிர்பார்ப்புகளின் அடிப்படையிலும், தமிழகத்தில் வட கிழக்குப் பருவ மழை இயல்பாக இருக்கும் என்ற நம்பிக்கையிலும் காவிரி டெல்டாப் பகுதி விவசாயிகள் இன்றைய அளவில் **13.3** இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் நெல் சாகுபடியை மேற்கொண்டு இருக்கிறார்கள். ஒருபுறம் கர்நாடகம் நமக்குரிய

---

### அன்பே கடவுள்

**உ**ங்கள் அன்பை ரகசியமாக வைத்திருக்காதீர்கள். அனைவருக்கும் பயன்படச் செய்யுங்கள்.

**—ரவீந்தர்நாத் தாகூர்**

---

நீரை வழங்கவில்லை. மற்றொரு புறம் வட கிழக்குப் பருவ மழையும் பொய்த்துவிட்டது. எனவே, மேட்டூர் அணையிலிருந்து கிடைக்கும் நீரை மட்டுமே நம்பி காவிரி டெல்டாப் பகுதியில் வேளாண்மை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் கர்நாடக மாநிலத்தில் தென் மேற்குப் பருவ மழை வலுத்ததால், கர்நாடகத்திற்குக் கிடைத்துள்ள நீர் வரத்திலிருந்து, இடைக்கால ஆணையின்படி, நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய நீரை, முழுவதுமாக வழங்க வேண்டும் என்று கர்நாடக அரசை நாம் வற்புறுத்தினோம். அதற்கு மாறாக, இந்த ஆண்டில் தென் மேற்குப் பருவ மழை தொடக்கத்தில் வறண்ட நிலையும் நீர்த் தட்டுப்பாடும் ஏற்பட்டதால், இது வறட்சி ஆண்டு என்று உண்மைக்குப் புறம்பாகக் கூறி ஒட்டு மொத்தத்தில் பகுதி அள்வு தண்ணீரை மட்டுமே கொடுக்க முடியும் என்ற வாதத்தைக் கர்நாடக அரசு நடுவர் மன்றத்தின் முன்பு வைத்தது.

இந்த வாதத்தை ஏற்க இயலாது என்று நடுவர் நீதி மன்றம் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறது. அப்படியே வறண்ட நிலை இருந்ததாலும், அப்படிப் பட்ட நிலை உள்ளதா, என்று ஆராய்ந்து என்ன விகிதாச் சாரத்தில் நீர்ப் பங்கீடு செய்வது அதாவது Pro-rata basis-இல் நீர்ப் பங்கீடு செய்வது என்பதை கர்நாடக அரசே தன்னிச்சையாகத் தீர்மானிக்கக் கூடாது என்றும், அதற்குரிய அதிகாரம், நடுவர் மன்றத்திற்கு மட்டுமே உள்ளது என்ற தமிழக அரசுத் தரப்பு வாதத்தையும் நடுவர் மன்றம் ஏற்றுக் கொண்டு கர்நாடக மாநில அரசின் வாதத்தைத் தள்ளுபடி செய்தது.

கர்நாடக மாநிலம் கொடுத்த புள்ளி விவரங்களின் அடிப்படையிலே கூட அவர்கள் தமிழ்நாட்டுக்கு உரிய நீர் அளவில் **28** TMC அடி காவிரி நீரை இதுவரை கொடுக்கவில்லை என்றும் அந்தக் குறைபாட்டை ஈடுசெய்ய, கர்நாடக மாநிலத்தின் வாதத்தின்படியே இடைவரத்து விகிதாச்சாரமாக அதாவது Pro-rata-படி **17** TMC நீரைக் கழித்தாவது, **11** TMC அடி நீரை அவர்கள் உடனடியாகத் தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்றும் நடுவர் மன்றம் **19.12.1995** அன்று தீர்ப்பு அளித்துள்ளது. இரு மாநிலங்களும் அளித்த விவரங்களை ஆராய்ந்து காவிரி நடுவர் நீதி மன்றம் **19.12.1995** அன்று உடடினயாக **11** TMC அடி நீரையும், எஞ்சியுள்ள மாதங்களில் நடுவர் மன்றத்தின் **25.6.1991** தேதியிட்ட இடைக்கால ஆணையின்படி அம்மாதங்களுக்கு என்று குறிப்பிடப் பட்டுள்ள அளவு காவிரி நீரைத் தமிழகத்திற்குக் கர்நாடக மாநிலம் வழங்க வேண்டும்

என்று தீர்ப்பு வழங்கியது. நமது தேவையைவிட நமது எதிர் பார்ப்பைவிட இந்த அளவு குறைவாக இருந்தாலும் நாம் அந்தக் குறைந்த அளவு நீரையாவது நடுவர் மன்ற தீர்ப்புப்படி கர்நாடகம் வழங்கும் என்று எதிர்பார்த்தோம்.

இரு மாநிலங்களிடையே ஏற்படும் நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையை ஆராய்ந்து தீர்ப்புக் கூறுவதற்காக அமைக்கப் பட்ட தனி அமைப்பாகக் காவிரி நதி நீர் நடுவர் மன்றம் இருந்தும் அதன் தீர்ப்பைக் கர்நாடகம் இன்று வரை மதிக்கவில்லை.

தமிழகத்தின் நியாயமான உரிமைகள், மறுக்கப்படும் போதெல்லாம் எங்கள் அரசு, உரிமைக் குரல் கொடுக்க என்றும் தயங்கியதில்லை. அதே உணர்வுடன் தற்போது பாசன நீர் இன்றி, வாடிவிடும் நிலையில் உள்ள பயிர்களைக் காப்பாற்ற குறைந்தபட்சம் 30 TMC அடி நீரையாவது கர்நாடக மாநிலம் தமிழகத்திற்கு வழங்க வேண்டும் என்று வற்புறுத்தி நான் மாண்புமிகு பாரதப் பிரதமர், திரு பி.வி. நரசிம்ம ராவ் அவர்களுக்கு 11.12.1995 அன்றும், மாண்புமிகு கர்நாடக மாநில முதலமைச்சர் திரு தேவே கௌடா அவர்களுக்கு 7.12.95 அன்றும் கடிதங்களை எழுதினேன்.

கர்நாடக மாநிலத்தின் நீர்த்தேக்கங்களில் தற்போது தேக்கி வைக்கப்பட்டிருக்கும் நீரில் இருந்து 30 TMC அடி நீரை நிச்சயமாகக் கர்நாடக மாநிலம், காவிரியில் நமக்காகத் திறந்து விட முடியும். ஆனால், ஒரு

---

### அறிவும்ஆன்மாவும்

**அ**றிவு மட்டும் கூறும் வழியில் செல்லாதீர்கள். ஆன்மா ஆணையிடும் வழியிலும் செல்லுங்கள்.

**–பெஞ்சமின் பிராங்க்ளின்**

---

அண்டை மாநிலத்தினுடைய பிரச்சினையை இன்னொரு மாநிலம் உணர்ந்து கொண்டு உதவ முன் வராததோடு, நமது உரிமைகளைப் புறக்கணித் திருப்பது நமக்கு வேதனையை அளிக்கின்றது. எனவே, மத்திய அரசு, இதில் உடனடியாகத் தலையிட்டு, தீர்வு காண வேண்டும் என்று நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டேன்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், கூட்டத்தைக் கூட்டி னால் மட்டுமே, தான் கலந்து கொள்ளத் தயாராக இருப்பதாக, திரு தேவே கௌடா அவர்கள் கருத்துத் தெரிவித்ததாகச் சில செய்தித் தாள்களில் செய்தி வெளி வந்துது. எப்படியேனும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதால், 18.12.1995 அன்று சென்னைக்கு வந்திருந்த மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் இந்த விவரங்களை எடுத்துரைத்து, இந்தக் கூட்டத்தைப் பாரதப் பிரதமர் அவர்களே விரைவில் கூட்ட வேண்டும் என்று நானும் கேட்டுக் கொண்டேன்.

கடந்த சில நாட்களாகக் கர்நாடக மாநிலத்தில் நடை பெற்று வரும் நிகழ்ச்சிகள் 19.12.1995 நடுவர் மன்றத் தீர்ப்புப்படி 20 TMC அடி நீரை நமக்ககாத் திறந்து விடுவார்கள் என்கின்ற நம்பிக்கையை உறுதிப் படுத்துவதாக இல்லை. எனவே, மத்திய அரசு முனைப்புடன் தலையிட்டு இந்தப் பிரச் சினைக்குத் தீர்வு காண வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பொதுவாக, இரண்டு மாநிலங்களுக்கு இடையே ஏற்படக் கூடிய இத்தயைப் பிரச்சினைகளை ஆராய்ந்து, நல்ல முடிவெடுக்க வேண்டிய கட்டாயமும், கடமை யும் மத்திய அரசுக்கு உண்டு.

நம்மைப் பொறுத்த வரையில் நமக்கு 19.12.1995-இன் நடுவர் மன்ற ஆணைப்படி வழங்க வேண்டிய குறைந்தபட்ச 11 TMC அடி நீரையும், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களுக்குரிய 9 TMC அடி நீரையும் சேர்த்து ஆக மொத்தம் 20 TMC அடி நீரை, உடனடியாகக் காவிரியில் கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும். அதற்கு மத்திய அரசு அரசியலமைப்புச் சட்டப்படித் தீர்வு காணத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே நமது கோரிக்கை ஆகும். இதை இந்த அவையும் வலியுறுத்தும் என்று நம்புகிறேன்.

மத்திய அரசு கர்நாடக மாநில அரசை வற்புறுத்தி, காவிரியில் 20 TMC நீரை உடனடியாகத் திறந்துவிட, தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வற்புறுத்தும் தீர்மானத்தையும், காவிரி நதி நீர் நடுவர் மன்றம் 25.6.1991 அன்று பிறப்பித்த இடைக்கால ஆணையை நடை முறைப்படுத்த மத்திய அரசு

ஏற்கெனவே அறிவித்த கண் காணிப்புக் குழு அதாவது Monitoring Committee மற்றும் நடைமுறைப்படுத்தும் குழு அதாவது Implementation Committee ஆகியவற்றை மத்திய அரசு உடனடியாக அமைக்க வேண்டும் என்ற தீர்மானத் தையும் தமிழக மக்கள் அனைவரின் சார்பிலும் இந்த அவையில் நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தின் இந்த உயிர் மூச்சுப் பிரச்சினையில் நாங்கள் மேற்கொண்டு வரும் அனைத்து முயற்சிகளுக்கும் மாண்புமிகு உறுப்பினர்களும், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் தமிழக மக்கள் நலன் காக்க ஓரணியில் திரண்டு தங்களது முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு தமிழக அரசின் சார்பில், காவிரி நதி நீர்ப் பிரச்சினை குறித்த தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

---

### தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டி

# சிறந்த வீராங்கனை ஷைனி வில்சனுக்கு மாண்புமிகு முதல்வர் கார் பரிசு



● நான்காம் அட்டை சொல்லும் செய்தி

"தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டியின் சிறந்த வீராங்கனை" திருமதி ஷைனி வில்சனுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 28.12.95 அன்று மாருதி கார் வழங்கினார்.

தடகளப் போட்டிகளில் சிறப்பான வெற்றிகளைக் குவித்த திருமதி ஷைனி வில்சனைப் பாராட்டும் வகையிலும், 1984-ஆம் ஆண்டு தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டி தொடங்கப்பட்டது முதல், தொடர்ச்சியாக 7 போட்டிகளிலும் அவர் கலந்து கொண்டதைச் சிறப்பிக்கும் வகையிலும், சர்வதேச அளவில் இந்தியாவுக்குப் பெருமை சேர்க்கும் வெற்றிகளைத் தேடித் தந்ததற்குப் பாராட்டு தெரிவிக்கும் வகையிலும் தமிழக அரசின் சார்பில் "மாருதி 1000" கார் ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

காரை வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், நடந்து முடிந்த 7வது தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டியில் தலைசிறந்த சாதனைகள் புரிந்த திருமதி ஷைனி வில்சனுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

விருதையும், கார் சாவியையும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட திருமதி ஷைனி வில்சன் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களின் அன்புப் பரிசுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள் நலனில் அக்கறை காட்டும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, இதயம் கனிந்த நன்றி தெரிவித்த திருமதி ஷைனி வில்சன், ஆசிய விளையாட்டுப் போட்டியைப் போல வெகு சிறப்பான முறையில் தெற்காசிய விளையாட்டுப் போட்டியை நடத்திக் காட்டியதற்கும் நன்றி கூறினார்.

திருமதி ஷைனியுடன் வந்திருந்த அவரது குடும்பத்தினரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தன், தமிழக அரசுத் தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., காவல்துறைத் தலைவர் திரு தேவாரம், இ.கா.ப., கல்வித்துறைச் செயலாளர் திரு எல்.என். விஜயராகவன், இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு மோகன்பியாரே இ.ஆ.ப., தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டி அதிகாரிகள் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.



## ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்

நிழற்படத் தொகுப்பு







போட்டிகளில் பங்கேற்க அணிவகுத்து வருகின்றது விளையாட்டு வீரர்-வீராங்கனைகளின் கூட்டம்



வங்காளதேசம்



பூடான்




மாலத்தீவு



பாகிஸ்தான்



இலங்கை



நேபாளம்

இந்தியா







ரூ.8.5 கோடி செலவில் நுங்கம்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள அதிநவீன வசதிகளுடன் கூடிய டென்னிஸ் அரங்கை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் திறந்து வைத்தார். மாண்புமிகு கல்வியமைச்சர் திரு பொன்னுசாமி அவர்கள், தெற்காசிய விளையாட்டு சம்மேளனத் தலைவர் திரு பா. சிவந்தி ஆதித்தன், தெற்காசியப் போட்டி அமைப்புக்குழு செயலர் திரு எல்.என். விஜயராகவன் ஆகியோர் உடன் உள்ளனர். (14.12.95, சென்னை)

---

சர்வதேசத் தரத்தில், எழும்பூரில் ரூ.11 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மேயர் இராதாகிருஷ்ணன் ஆக்கி அரங்கத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம், தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப. ஆகியோர் உடன் உள்ளனர். (21.12.95, சென்னை)









வேளச்சேரியில் 5 ஏக்கர் பரப்பளவில், ரூ.12 கோடி செலவில், 4,500 ரசிகர்கள் அமர்ந்து பார்வையிடும் வகையில், சர்வதேச நீச்சல் சம்மேளன விதிமுறைகளின்படி வடிவமைக்கப்பட்டுள்ள நீர் விளையாட்டு நீச்சல் வளாகத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் திறந்து வைத்தார். (14.12.95, சென்னை)

சென்னை நேரு ஸ்டேடியம் அருகில் ரூ.25 கோடி செலவில் அதிநவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு உபயோக உள் விளையாட்டு அரங்கை மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெய்லலிதா அவர்கள் திறந்து வைத்து இந்திய-நேபாள அணிகளுக்கு இடையேயான கைப்பந்துப் போட்டியைத் தொடக்கி வைத்து ஆட்டத்தைக் கண்டுகளித்தார். மாண்புமிகு கல்வியமைச்சர் திரு க. பொன்னுசாமி, தெற்காசிய விளையாட்டு சம்மேளனத் தலைவர் திரு பா. சிவந்தி ஆதித்தன், போட்டி அமைப்புக்குழு செயலர் திரு எல்.என். விஜயராகவன், இ.ஆ.ப. ஆகியோர் உடன் உள்ளனர். (22.12.95, சென்னை)
















நொடிக்கொரு முறை பூத்துக் குலுங்கிய
நறுமலர்க் கூட்டமோ நந்தவனமோ!

விநாடிக்கு ஒரு உருவம் படைத்து இதயத்தைக்
கொள்ளை கொண்டதே பிள்ளை மலர்கள்!







வளைந்து நெளிந்தோடிய வண்ணக் குழம்போ!
வானவில் தரையிறங்கிய அழகோ! அற்புதமோ!

கொடி அசைப்பு உருவக்காட்சி படைத்த கோலாகலக் காட்சிகள்

எண்ண இனித்திடும் இக்கோலம் யாவும்
வண்ணக் கொடிகள் செய்த மாயந்தானோ?













மராட்டிய மாநிலத்து லெசியம் நடனம்



இராஜஸ்தான் - சரி நடனம்



மத்தள நடனம்

## வண்ண மிகு



குஜராத் மாநிலத்துக் கோலாட்டம் - தண்டியா ராஸ்

## கலை நிகழ்ச்சிகள்



அஸ்ஸாம் மாநிலத்து அணங்குகள் ஆட்டம் - பிஹூ

மேகாலயா மாநிலத்து சீர்மிகு நடனம் - வாங்லா





மூக்கின் மீது விரல் வைக்க வைத்த மூங்கில் நடனம் - செராவ்

மத்தியப் பிரதேச பழங்குடியினர் நடனம் - கவுட் மரியாஸ்





தமிழகத்தின் பொய்க்கால் குதிரை



'யாக்' எருமை - சிங்க நடனம்

ஆந்திரப் பிரதேசத்து லம்பாடி நடனம்





## சிறப்புடன் நடைபெற்ற

## வீராபுரம் துப்பாக்கி சுடும் தளம் திறப்பு விழா

# 50 மீட்டர் தொலைவிலிருந்த இலக்கைக் குறி பார்த்துச் சுட்டார் மாண்புமிகு முதல்வர்

**செ**ன்னைக்கு அருகில் வீராபுரத்தில் புதிதாகக் கட்டப் பட்டுள்ள துப்பாக்கி சுடும் ரேஞ்சை ரிப்பன் வெட்டி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் **21.12.95** அன்று குத்து விளக் கேற்றித் திறந்து வைத்தார். பின்னர் 50 மீட்டர் தூரம் துப்பாக்கி சுடும் பந்தயம் நடைபெறும் அரங்குக்குச் சென்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அங்கு தயாராக வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியால் சுட்டு பிஸ்டல் மற்றும் ரைபிள் பிரிவுத் துப்பாக்கி சுடும் போட்டி களைத்தொடங்கி வைத்தார்.

**குறி தவறாமல் இலக்கை நோக்கிப் பாய்ந்தது குண்டு.**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள்






துப்பாக்கியால் சுட்டதும் 50 மீட்டர் தூரத்தில் இருந்த இலக்கின் நடுவில் குறி தவறாமல் குண்டு பாய்ந்தது. குண்டு பாய்ந்த அட்டையை வரவழைத்து, அதில் சரியாக 10 புள்ளிகள் இலக்கை குண்டு துளைத்து இருப்பதை அறிவித்ததும், அரங்கில் கூடியிருந்த வீரர்கள் கைதட்டிப் பாராட்டு தெரிவித்தனர்..

குண்டு பாய்ந்த அட்டையில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கையெழுத்திட்டுக் கொடுத்தார்.

25 மீட்டர் பந்தயம் நடத்தும் அரங்கையும், 10 மீட்டர் தூரம் பந்தயம் நடத்தும் அரங்கையும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் சுற்றிப் பார்த்தார். 25 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவு மகளிர் போட்டி நடந்தது. இந்தியா, மாலத்தீவு, இலங்கை அணிகளின் வீராங்கனைகள் கலந்து கொண்ட இந்தப் போட்டியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏறத்தாழ 5 நிமிடம் அமர்ந்து ரசித்தார்.

அங்கு அவருக்கு இந்தியாவின் பிரபல துப்பாக்கி சுடும் வீரர் ஜஸ்பால் ராணா, வீராங்கனை குகேலி ஆகியோர் அறிமுகம் செய்து வைக்கப் பட்டனர்.

**நவீன வசதிகளுடன்**
**புதிய தளம் மாண்புமிகு**
**முதல்வருக்கு நன்றி**

இவ்வளவு நவீன வசதி களுடன் துப்பாக்கி சுடும் தளங்களை அமைத்து வழங்கிய தற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு, தேசிய துப்பாக்கி சுடும் சங்கப் பொருளாளர் மேஜர் டி.ஆர்.எல். நந்தா நன்றி தெரிவித்தார்.

போட்டி குறித்த விவரங் களைக் கேட்டறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 11.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., காவல் துறை இயக்குநர் திரு வால்டர் ஐ. தேவாரம், இ.கா.ப., காவல்துறைக் கூடுதல் இயக்குநர் திரு. ராஜசேகரன் நாயர், இ.கா.ப., ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டனர்.

**உலக அரங்கில்**
**இந்தியாவைத் தலை நிமிர்ந்து**
**நிற்க வைத்திடும்**
**வீராபுரம் தளம்**

தேசிய துப்பாக்கி சுடும் சங்கப் பொருளாளர் மேஜர் டி.ஆர்.எல். நந்தா, உலக அளவிலான பல்வேறு போட்டி களில்-சைப்ரஸில் நடந்த உலகத் துப்பாக்கிச் சுடும் போட்டி, ஆக்லாந்தில் 1990ஆம் ஆண்டு நடந்த காமன்வெல்த் போட்டி, இதற்கு முன்னர் நடைபெற்ற இரண்டு தெற்காசிய விளை



யாட்டுப் போட்டிகள் ஆகிய வற்றுக்குச் சென்றவர் ஆவார். அங்கெல்லாம் பயன்படுத்தப் பட்ட துப்பாக்கி சுடும் தளங் களையும் தற்போது ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளுக்கான புரட்சித் தலைவி அவர்களது முழு முயற்சியால் புதிதாக அமைக்கப் பட்டுள்ள வீராபுரம் தளத்தையும் ஒப்பு நோக்கி மேஜர் நந்தா வெகுவாகப் புகழ்ந்துரைத்தார். "அங்கு இருந்தவை எல்லாம் பெரும்பாலும் தற்காலிகமானவை. அவற்றையெல்லாம்விட, இங்கு உள்ள துப்பாக்கி சுடும் தளம் மிகவும் வசதியாகவும், சர்வ தேசத் தரத்துடனும் கட்டப் பட்டுள்ளது" என்று தெரிவித்த மேஜர் நந்தா, "ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளைச் சென்னையில் நடத்த முழுமுயற்சி எடுத்ததுடன், அதனையொட்டித் துப்பாக்கி சுடும் போட்டிக்கென இவ்வளவு நவீன வசதிகளுடன் சிறப்பு மிகுந்த துப்பாக்கிச் சுடும் 'ரேஞ்சுகளை' விளையாட்டு வீரர்களுக்கு வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்குத் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

**வானில் பறக்கும் தட்டுகளைத் துப்பாக்கியால் சுடும் போட்டி: தொடங்கி வைத்தார் மாண்புமிகு முதல்வர்.**

*180* டிகிரியில் அரை வட்டத்துக்குள் மின்னல் வேகத்தில் ஏதாவது ஒரு திசையை நோக்கிப் பறக்க விடப்படும் தட்டுகளைத் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்துவதுதான் டிராப் போட்டி. இதற்காகப் பூமிக்கு அடியில் கம்ப்யூட்டர் மயமாக்கப் பட்ட கருவிகள் பொருத்தப் பட்டுள்ளன.

இந்தக் கம்ப்யூட்டர் கருவி யால் வானத்தில் பறக்க விடப்படும் தட்டுகளைத் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தும் போட்டிகள் நடைபெறும் அலமாதியில் அமைந்துள்ள, சிவந்தி ஆதித்தன் துப்பாக்கி சுடும் மைதானத்தில் இப் போட்டியை **21.12.95** அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த டிராப் போட்டியைத் தொடங்கிவைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஹெலிகாப்டர் மூலம் துப்பாக்கி சுடும் மைதானத்துக்கு வந்தார்.

அங்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த மைதானத்தில் சர்வதேசத் தரத்துக்கு இணை யாகச் செய்யப்பட்டுள்ள வசதி களைச் சுற்றிப் பார்த்தார். அங்கு புதிதாகக் கட்டப்பட்டுள்ள நிர்வாக அலுவலகத்தில் குத்து விளக்கு ஏற்றிவைத்தார்.

மேடைக்கு வந்த மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், 'புல்' என்று மைக்கில் கூறி டிராப் போட்டிகளைத் தொடங்கி வைத்தார். அப்போது பூமிக்கு அடியில் உள்ள கருவிகளில் இருந்து தட்டுகள் வானத்தில் பறக்கவிடப்பட்டன. உடனே கூட்டத்தினர் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

தொடர்ந்து போட்டிகள் தொடங்கின. மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் சற்று நேரம் அமர்ந் திருந்து போட்டிகளைப் பார்த்தார். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சென்னை ரைபிள் கிளப் சார்பில் நினைவுப் பரிசை திரு சிவந்தி ஆதித்தன் அவர்கள் வழங்கினார்.

கொடி அமைப்பு உருவக் காட்சி

# நொடிக் கொரு முறை பூத்துக் குலுங்கிய நந்தவனம்

நொடிக்கொருமுறை பூக்கும் நந்தவனமோ, வளைந்து நெளிந்து ஓடும் வண்ணக் குழம்போ, வானவில் தானாக தரையிறங்கிய அற்புதமோ! என அனைவரையும் வியக்கவைத்த காட்சிகளைக் காட்டிய கொடியசைப்பு உருவக்காட்சி (Playcard Display) நிகழ்ச்சி, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் பெருமுயற்சியால், சென்னையில் நடைபெற்ற ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழா மற்றும் நிறைவு விழாவின் போது மிக அதிகமான பொதுமக்களின் மனங்களைக் கொள்ளை கொண்டது.

கொடியசைப்பு அலங்கார நிகழ்ச்சி என்பது சர்வதேச விளையாட்டுப் போட்டிகள், ஒலிம்பிக் போட்டிகள் போன்ற பல நாடுகள் பங்கேற்கும் விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க நாள் மற்றும் நிறைவு நாளில் பல்வேறு வண்ணக் கொடிகளை இளைஞர்கள் கைகளில் அசைத்து, வெளிப்படுத்தி, பல நிறங்களில் பல்வேறு உருவங்களை ஓவியர்கள் திரைச்சீலையில் ஏற்படுத்துவது போல, உருவாக்கிக் காட்டுவார்கள். இவற்றுள் எழுத்துக்கள், விளையாட்டு இலச்சினைகள், தேசியக்கொடிகள் போன்ற உருவங்களை வண்ணங்களில் அமைத்துக் காட்டுவார்கள்.

### எல்லோரையும் ஈர்த்த இனிமையான நிகழ்ச்சி

சென்னையின் நடைபெற்ற ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி கொடியசைப்பு அலங்கார நிகழ்ச்சிக்காகச் சென்னையில் ஆசிரியராகப் பணியாற்றும் திரு தேனப்பன் அவர்கள் தலைமையில் 125 ஆசிரிய, ஆசிரியைகள் கிட்டத்தட்ட ஒரு மாதக் காலத்திற்கு 3,600 பள்ளி மாணவர்களைக் கொண்டு ஒத்திகை பார்த்தார்கள். திரு தேனப்பன் இக்கலையில் ரஷ்யா போன்ற நாடுகளில் சிறப்புப் பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### வண்ணக் கொடிகள்

சென்னையிலுள்ள 35 பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்றார்கள். ஒவ்வொரு மாணவனின் கையிலும் ஒன்பது நிறக் கொடிகளைப் பலமுறைப் பயன்படுத்தி பல வண்ண உருவங்களைக் காட்டினார்கள். கிட்டத்தட்ட 80 வகையான எழுத்துக்கள், உருவங்களை வெளிப்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகளை அமைத்திருந்தார்கள்.

### முதல்வரின் திருவுருவம்

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் திருவுருவம், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் உருவம், ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டியின் இலச்சினையான பாயும் இளஞ்சிங்க உருவம், வணக்கம், வருக வருக, மாண்புமிகு தமிழக முதல்வரே வருக, நன்றி என்ற பொதுவான எழுத்துக்கள், வடிவங்களை உருவாக்கினார்கள்.

### தெற்காசிய நாடுகள்

தெற்காசிய நாடுகளின் தேசியக் கொடிகள், அந்நாடுகளின் பெயர்கள், தேசியச் சின்னங்கள் போன்றவற்றைச் சிறிதும் பிறழாமல் நேரடியாகப் பார்ப்பது போன்ற நிறங்களில் அமைத்துக் காட்டினார்கள்.

### அசையும் காட்சிகள்

இதுதவிர, அனைவரையும் வியப்பிலாழ்த்திய வண்ண உருவங்கள் உண்டு. பாராசூட்டிலிருந்து வீரர்கள் மேலிருந்து குதிக்கும் காட்சியைப் படிப்படியாகக் காட்டியதும், வீரன் ஒருவனைச் சுமந்தபடி குதிரை ஒன்று இடது புறத்திலிருந்து வலது புறத்துக்குத் தடைகளைத் தாண்டும் காட்சியை மிகமிக அற்புதமாக வடிவமைத்து, பார்வையாளர்கள் அனைவரின் பாராட்டுக்களையும் குவித்துக் கொண்டார்கள்.



தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில், காவிரி நதி நீர்ப் பிரச்சினை குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. **(29.12.95)**













# காவிரி நதிநீர்ப் பிரச்சினை:
# மாண்புமிகு முதல்வர் அவர்கள்
# தலைமையில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள்
# புதுடெல்லி பயணம்

காவிர் நதி நீர் மன்றத் தீர்ப்பின்படி, தமிழ்நாட்டிற்கு கர்நாடக அரசு தண்ணீர் விடவேண்டும் என்ற தீர்ப்பை அமல்படுத்துவதற்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்கள் கூட்டியுள்ள கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக, தமிழ்நாட்டின் சார்பில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் 30.12.1995 அன்று மாலை புதுடெல்லிக்குப் பயணமானார்கள்.





காவிரி நதி நீர்ப் பிரச்சினை தொடர்பாக புதுடெல்லியில் நடைபெற்ற முதல்வர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (30.12.95)



31.12.95 அன்று இரவு மீண்டும் புதுடெல்லியில் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், அவரது இல்லத்தில் சந்தித்து காவிரியில் 11 டி.எம்.சி அடி தண்ணீர் திறந்துவிடுவது குறித்துப் பேசினார்.

# சாத்தூர் வேம்பக்கோட்டை நீர்த்தேக்கம்
# தர்மபுரி சூளகிரி - சின்னாறு, நெடுங்கால் அணைக்கட்டு, பரூர் பாசனத் திட்டம்

# நீர் நிலை ஆதாரங்கள்
# ரூ.4 கோடி செலவில் மேம்பாடு

**த**மிழ்நாட்டில் விவசாயப் பெருமக்கள் காலங்காலமாகக் கையாண்டு வரும் நீர்ப்பாசன முறைகளை நவீனப்படுத்த வேண்டும் என்றும், தமிழ்நாட்டிலுள்ள நீர்ப்பாசன ஆதாரங்களான குளம், குட்டை, வாய்க்கால், ஆறு போன்றவற்றைச் சீர்செய்து வளப்படுத்த வேண்டும் என்றும், அத்தகைய மேம்படுத்தப்பட்ட பாசன வசதியின் மூலமாக தமிழ்நாட்டின் வேளாண் உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி வகுக்கப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே தனது கருத்தினை வெளியிட்டிருந்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டிருந்த இந்த ஆலோசனையின் அடிப்படையில், தமிழக வேளாண் துறை உலக வங்கியின் உதவியோடு தமிழ்நாட்டிலுள்ள பல வகைப்பட்ட நீர்நிலைகளையும், நீர் ஆதாரங்களையும் மேம்படுத்துவதற்காக மிகப் பெரிய அளவில், 1,140 கோடி ரூபாய் மதிப்பில் "தமிழ்நாடு நீர் ஆதாரங்கள் மேம்பாட்டுத் திட்டம்" (Water Resources Consolidation Project) ஒன்றினைத் தயாரித்து, அதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் அறிவுரையின்படி, உலக வங்கியின் அனுமதியையும் பெற்று தற்போது வெற்றிகரமாகச் செயல்படுத்தியும் வருகின்றது.

தற்போது இந்தத் திட்டத்தில் கீழ்க்கண்ட பகுதிகளில் உள்ள நீர்நிலை ஆதாரங்களைச் சீரமைத்து, அவற்றை மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணைபிறப்பித்துள்ளார்.

1. தர்மபுரி மாவட்டத்திலுள்ள சூளகிரி - சின்னாறு துணைத் திட்டத்தினை 84 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் பணி-

2. தர்மபுரி மாவட்டத்திலுள்ள நெடுங்கால் அணைக்கட்டு மற்றும் பரூர் பாசனத் திட்டத்தினை 2.71 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தும் பணி-

3. காமராஜர் மாவட்டம் சாத்தூர் வட்டத்திலுள்ள வேம்பக்கோட்டை நீர்த் தேக்கத் திட்டத்தினை 28 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் பணி-

நீர் ஆதாரங்கள் சீரமைக்கும் பணிகளை முன்னுரிமையின் அடிப்படையில் விரைந்து செயல்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தர விட்டுள்ளார்.

**நீ உன்னையறிந்தால்...**

**ம**னதை ஒருமுகப்படுத்துவதால், எந்தக் காரியத்தையும் சாதிக்கலாம்.

**—சுவாமி விவேகானந்தர்**




# விளையாட்டுப் போட்டிகளை நேரில்காண...



## அலைமோதியது அன்பர் கூட்டம்
## அரங்குகளில் மக்கள் வெள்ளம்

## புரட்சித்தலைவியின் சிந்தனைக்கு வெற்றி!

**ஆ**ர்வம் இருக்கும்; ஆனால், அதை முறைப்படுத்தும் வழிகாட்டுதல் இருக்காது. ஊக்கம் இருக்கும்; ஆனால், அதனை உற்சாகப்படுத்தி உயர்த்திட வாய்ப்பு வசதிகள் இருக்காது. இதுதான், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்பதற்கு முன்பு தமிழகத்திலிருந்த விளையாட்டுத்துறையின் நிலை ஆகும்.

இந்த நிலையை மாற்றி உலக விளையாட்டு அரங்கில் தமிழக வீரர்கள் உன்னத இடத்தைப் பெறும் வகையில் அனைத்து வசதிகளையும் அளிப்பதோடு, தமிழக மக்களின் மனங்களிலும் விளையாட்டு உணர்வுகளை விதைத்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிப்பதோடு, ஒரு உத்வேகத்தையும் தமிழக மக்கள் மத்தியில்



**'பாரத ரத்னா' டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் எட்டாவது நினைவு நாளையொட்டி, சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அவரது சமாதியில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களும், மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். (24.12.95)**

உருவாக்க வேண்டும் என்று சிந்தித்துச் செயல்பட்டு, சர்வதேசத் தரத்தில் பல்வேறு விளையாட்டு அரங்குகளை உருவாக்கியதுடன், சர்வதேசப் போட்டிகள் நடத்துவதன் மூலம், அந்த விருப்பத்தை வெற்றி பெற வைத்திட வேண்டும் என்று ஏழாவது தெற்காசியப் போட்டிகளை சென்னையிலேயே நடத்திட ஏற்பாடு செய்தார் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள். மேலும், அனைத்துப் போட்டிகளையும் மக்கள் இலவசமாகக் கண்டுகளிக்கலாம் எனவும் அறிவித்தார்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் இந்த எண்ணம் நூற்றுக்கு நூறு நிறைவேறியதை ஒவ்வொரு அரங்கு முன்னரும் திரண்டிருந்த மக்கள் வெள்ளம் எடுத்துக்காட்டியது.

ஏழாவது தெற்காசியப் போட்டி விளையாட்டுகள் நடத்திட சர்வதேசத் தரத்தில் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் சென்னை நகரின் பல்வேறு பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் அரங்குகளுக்கு விளையாட்டு ரசிகர்களும், பொதுமக்களும் பேரார்வத்துடன் திரண்டனர். அரங்குகள் யாவற்றிலும், எதிர்பார்த்ததைவிட மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. இது விளையாட்டு வீரர்களுக்குப் புதிய உற்சாகத்தையும், உத்வேகத்தையும் அளித்ததுடன் மட்டுமல்லாது, எந்த நோக்கத்துடன் ஏழாவது தெற்காசியப் போட்டிகளை நடத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் முனைந்தாரோ, அந்த நோக்கம் வெற்றி பெற்றுவிட்டது என்பதையும் வெளிப்படுத்தியது.

புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா கூடைப்பந்து உள்ளுறை வளாகத்தில் அமைந்துள்ள கூடைப்பந்து புகழரங்கில், போட்டிகள் நடந்த எல்லா நாட்களிலும் உள்ளும் புறமும் கூட்டம் நிரம்பி வழிந்தது.

இதேபோல நமது மண்ணின் மணம் வீசும் விளையாட்டான கபடிப் போட்டி, நேரு பூங்கா அரங்கில், பார்வையாளர்களைப் பெருமளவில் ஈர்த்தது. மேலும் காட்சி விளையாட்டுகளாக, இதே அரங்கில் 'சிலம்பம்' நடைபெற்றபொழுதும் மக்கள் வெள்ளம் அலை மோதியது.



ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்

☆ உலக நாடுகளுக்கு இணையாக அற்புதமாக நடத்தினார்!

☆ வெற்றிக்கு வழிகாட்டும் ஊக்க சக்தியாக விளங்கினார்!



## மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு

# சிறப்பான பாராட்டு! சீர்மிகு நினைவுப் பரிசு!

சென்னையில் 7-வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளைச் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளுக்கு இணை யாக மிக அற்புதமாக நடத்தியதற்காகவும், போட்டிகள் வெற்றிகரமாக நடந்து முடிவதற்கு ஊக்கச்சக்தியாகவும், வழி காட்டும் சக்தியாகவும் விளங்கியதை யொட்டியும், விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளின் நலனில் தனி ஆர்வம் அக்கறை கொண்டிருப்பதையொட்டியும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு நினைவுப் பரிசு 28.12.95 அன்று வழங்கப்பட்டது.

இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தன், தமிழக அரசுத் தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., காவல்துறைத் தலைவர் திரு தேவாரம், இ.கா.ப., தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டியின் அமைப்புக்குழுச் செயலாளரும், கல்வித் துறைச் செயலாளருமான திரு எல்.என். விஜயராகவன், இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் - செயலாளர் திரு மோகன் பியாரே, இ.ஆ.ப., கல்வித்துறைச் சிறப்புச் செயலர் திரு டி.எஸ்.ஸ்ரீதர் இ.ஆ.ப. ஆகியோர் இந்த நினைவுப் பரிசை வழங்கினார்கள்.

தமிழ்நாடு சார்பிலும், இந்திய விளையாட்டுச் சம்மேளனங்கள், வீரர்கள் வீராங்கனைகள் சார்பிலும், போட்டியின் அமைப்புக்குழு உறுப்பினர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இதயபூர்வ நன்றியைத் தெரிவித்தனர்.

# ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி

# தங்கம் வெல்வதில் சாதனை படைத்தது இந்தியா

சென்னை மாநகரில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் முழு முயற்சியால் 18.12.95 முதல் 27.12.95 முடிய 10 நாட்கள் செம்மையுடன் நடந்தேறிய 7வது தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், வங்காளதேசம், நேபாளம், பூடான், மாலத்தீவு ஆகிய ஏழு நாடுகளைச் சார்ந்த 1,075 வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

இந்தியாவிலிருந்து அதிகபட்சமாக 264 வீரர், வீராங்கனைகள் இப்போட்டியில் பங்கேற்றனர். 14 பிரிவுகளில் நடைபெற்ற இந்திய அணி பங்கேற்ற அனைத்துப் போட்டிகளிலும் தங்கப் பதக்கம் வென்றது. 143 தங்கப் பதக்கங்களில் இந்திய அணி 106 பதக்கங்களைக் கைப்பற்றியது. 16 தங்கம் வென்று இலங்கை அணி பாகிஸ்தான் அணியை பின் தள்ளியது. புதிய உத்வேகத்துடன் களமிறங்கியுள்ள வங்காளதேசத்திற்கு 7 தங்கம் கிடைத்தது. தங்கம் வெல்லாத நாடுகள் பட்டியலில் மாலத்தீவு, பூடான் அணிகள் சேர்ந்தன. ஒவ்வொரு பிரிவிலும் அந்தந்த அணிகள் வென்ற தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் விவரம் வருமாறு:

| விளையாட்டின் | இந்தியா | | | இலங்கை | | | பாகிஸ்தான் | | | வங்காளதேசம் | | | நேபாளம் | | | பூடான் | | | மாலத்தீவு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பெயர் | த | வெ | வெண் | த | வெ | வெண் | த | வெ | வெண் | த | வெ | வெண் | த | வெ | வெண் | த | வெ | வெ | த | வெ | வெண் |
| தடகளம் | 21 | 24 | 10 | 11 | 7 | 11 | 2 | 2 | 10 | 1 | 1 | 4 | 1 | 2 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| கூடைப்பந்து | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| குத்துச்சண்டை | 10 | 2 | 0 | 0 | 2 | 4 | 2 | 6 | 1 | 0 | 2 | 5 | 0 | 0 | 9 | 0 | 0 | 2 | 0 | 0 | 0 |
| ஹாக்கி | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| ஜூடோ | 6 | 1 | 0 | 0 | 2 | 3 | 0 | 0 | 0 | 0 | 3 | 4 | 3 | 3 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| கபடி | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| துப்பாக்கிசுடுதல் | 20 | 14 | 7 | 5 | 7 | 7 | 0 | 5 | 3 | 5 | 4 | 10 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 |
| நீச்சல் | 15 | 5 | 2 | 0 | 3 | 9 | 0 | 6 | 3 | 1 | 2 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| டேபிள் டென்னிஸ் | 7 | 5 | 0 | 0 | 0 | 5 | 0 | 2 | 5 | 0 | 0 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| டென்னிஸ் | 7 | 5 | 0 | 0 | 1 | 6 | 0 | 1 | 6 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| வாலிபால் | 2 | 0 | 0 | 0 | 1 | 1 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| பளுதூக்குதல் | 7 | 1 | 0 | 0 | 1 | 3 | 3 | 6 | 1 | 0 | 0 | 3 | 0 | 2 | 3 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| மல்யுத்தம் | 7 | 3 | 0 | 0 | 1 | 2 | 3 | 2 | 5 | 0 | 3 | 3 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| கால்பந்து | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| மொத்தம் | 106 | 60 | 19 | 16 | 25 | 52 | 10 | 33 | 36 | 7 | 17 | 35 | 4 | 8 | 17 | 0 | 0 | 2 | 0 | 0 | 1 |

## ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்:

# நினைவில் நிற்கும் நிறைவு விழா

தமிழ்நாட்டு விளையாட்டு வளர்ச்சித்துறையின் விடிவெள்ளியாகத் திகழும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டு விளையாட்டுத்துறை வளர்ச்சிக்குக் கடந்த நாலரை ஆண்டுக் காலமாகப் பல்வேறு வளர்ச்சிப் பணிகளையும் சாதனைகளையும் ஆற்றி வருகிறார்.

அந்தச் சாதனைச் சரித்திரத்தின் தொடர்ச்சியாக, உலகமே போற்றும் அளவுக்கு ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை, இந்தியாவின் சார்பாக, சென்னை மாநகரத்தில் டிசம்பர் 18-ஆம் நாள் தொடக்க விழாவையும், தொடர்ந்து பல்வேறு போட்டிகளையும் நடத்தி, இறுதி நிகழ்ச்சியான நிறைவுவிழா நிகழ்ச்சியைக் கோலாகலமாக பொதுமக்களிடையே நடத்தினார்.

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் கடைசி நாளான டிசம்பர் 27-ஆம் நாள் மதியம் இந்தியக் கால்பந்து அணிக்கும் வங்காளதேச அணிக்கும் கடுமையான போட்டி நடந்து, இறுதியில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றவுடன், நிறைவு விழா நிகழ்ச்சிகள் தொடங்கின.

**தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை அடுத்து நடத்த இருக்கும் நேபாள நாட்டுக்கு, தெற்காசிய விளையாட்டுக் கொடியை, விளையாட்டுக் கூட்டமைப்புத் தலைவர் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தன் வழங்கினார். அருகில் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு முகுல் வாஸ்னிக், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர், மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு மாதவ்ராவ் சிந்தியா ஆகியோர் உள்ளனர்.**





**தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டி நிறைவு விழாவில் விழா மலரை, மாண்புமிகு மத்திய இரயில்வே இணை அமைச்சர் திரு சுரேஷ் கல்மாதி அவர்கள் வெளியிட்டார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் உடன் உள்ளார்.**

நண்பகலிலிருந்து விழா நடைபெறும் வளாகமான, 'விளையாட்டு அரங்குகளின் அரசி' என்று அனைவராலும் பாராட்டப் பெறும் ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கில் டிசம்பர் 27-ஆம் நாள் திரளான பொதுமக்களும் விளையாட்டு ஆர்வலர்களும் நீண்ட வரிசைகளில் நின்று இடம் பிடித்துக் கொண்டிருந்தனர். மாலை 4 மணியளவில் தமிழ்நாடு காவல்துறை மற்றும் பாண்டுவாத்தியக் குழுவினரால் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து, நாயன இசை, வந்திருந்தோர் அனைவரையும் மகிழ்வித்தது. முதல் நிகழ்ச்சியாக, வெள்ளை மற்றும் நீல நிறச் சீருடை அணிந்த மாணவ மாணவிகள் அரங்கினுள் நுழைந்து மைதானத்தைச் சுற்றி நின்று வரவேற்பு வளையம் அமைத்தனர். அவர்களின் கைகளில் நீலம் மற்றும் வெள்ளை நிறத் துணிக் கொடிகளைக் கொண்டு சீராக இசைக்கேற்றபடி அசைத்து, பார்வையாளர்களையும், விருந்தினர்களையும் வரவேற்றார்கள்.

## கொடிகளின் அணிவகுப்பு

வெள்ளை வெளேரென்று தூய உடையணிந்த மாணவ மாணவிகள் கைகளில் பல வண்ணக் கொடிகளை உயர்த்தியபடி மைதானத்துக்குள் கிட்டத்தட்ட இரண்டாயிரம் பேர் அணிவகுத்து வந்தனர். பேரணியாய் வந்த அவர்களின் நடுவில் ஏழு நாடுகளைச் சேர்ந்த தேசியக் கொடிகளும் இடம் பெற்றிருந்தன. இக்காட்சி, நீரோடையில் பல வண்ண மலர்கள் மிதந்து வருவதைப் போல, காண கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

தொடர்ந்து, ஏழு உறுப்பு நாடுகளின் கொடிகளை அந்தந்த நாட்டணிகளின் தலைமை விளையாட்டு வீரர்கள் எடுத்து வந்தார்கள். இந்தியத் தேசியக் கொடியை, சாதனைப்புரிந்த தங்க மங்கை சைனி வில்சன் தலைமையேற்று நடந்து ஏந்தி வந்தார்.

கடந்த பத்து நாட்களாகப் பதினான்கு வகையான போட்டிகளில் பங்கேற்ற அனைத்து நாட்டு வீரர், வீராங்கனைகள் அனைவரும் ஒன்றாகக் கலந்து, வேறுபாடின்றி ஓர் அணியாக நடந்து வந்தார்கள். அவர்களில் ஒரு சிலர் தங்கள் நாட்டுத் தேசியக் கொடிகளை எடுத்து வந்தனர். தங்களுடைய மகிழ்ச்சியைக் கைகளை அசைத்துப் பார்வையாளர்களிடம் தெரிவித்தார்கள். பின்னர், அவர்கள் மைதானத்தின் மையப் பகுதிக்குச் சென்று அவரவர் நாட்டைச் சேர்ந்த அணியினரோடு வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள். அப்போது அரங்கின் கொடியசைப்புக்காட்சியினர்மேடையில் ஏழு நாடுகளின் தேசியக் கொடிகளின் உருவத்தைக் காட்டிக் கொண்டிருந்தார்கள். அதைக் கண்டு மகிழ்ச்சியுற்ற அந்தந்த நாட்டு வீரர்கள் குழுக்களாக அமர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். புகைப்படம் எடுத்துக் கொடுத்தவர்கள் வேறு

நாடுகளைச் சார்ந்தவர்கள் என்பதே கூடுதலான மகிழ்ச்சி.

**வரவேற்பு**

இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள் வரவேற்பு உரையாற்றினார். அவர் பேசும் போது, விளையாட்டு உணர்வுக்குத் தேசிய எல்லையோ, மற்ற எல்லையோ கிடையாது. நட்புணர்வே அனைத்திலும் மேலானது. அதுவே நிலையானது. விளையாட்டுத் துறைக்காக மாண்புமிகு தமிழக

மேலும், அவர் பேசுகையில், கடந்த சில நாட்களாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெறுவதற்காக ஓய்வில்லாமல் உழைத்தார். விளையாட்டுப் போட்டிகளின் அனைத்து ஏற்பாடுகளையும் தனிப்பட்ட முறையில் மேற்பார்வையிட்டார். என்றென்றும் நினைவில் நிற்கும் வகையில் மாபெரும் வெற்றியாக இந்த விளையாட்டுப் போட்டி அமைந்ததற்குக் காரணம்,

கூறினார்.

கடந்த பத்து நாட்களாக நடந்த போட்டிகளில் வெற்றி பெற்றுச் சாதனைபுரிந்த இந்திய வீரர் ஜஸ்பால் ரானா, சைனி வில்சன், பகதூர் பிரசாத், செபாஸ்டியன் சேவியர் மற்றும் இலங்கை வீராங்கனை சுசாந்திகா ஜெயரத்தினே ஆகியோருக்குச் சிறப்புப் பரிசுகளை மாண்புமிகு மத்திய விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை இணையமைச்சர் திரு முகுல் வாஸ்னிக் வழங்கினார்.



**தெற்காசிய விளையாட்டுப் போட்டியின் சிறந்த வீராங்கனையாகத் தேர்வு பெற்ற திருமதி ஷைனி வில்சனுக்கு மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு முகுல் வாஸ்னிக் பரிசு வழங்கினார். மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு மாதவராவ் சிந்தியா, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர், தெற்காசிய விளையாட்டுச் சம்மேளனத்தின் தலைவர் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தன் ஆகியோர் உடன் உள்ளனர்.**

முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆற்றியுள்ள அரும் பெரும் பணிகளுக்காக இந்திய விளையாட்டுத் துறையினர் சார்பாகவும் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதாகச் சொன்னார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களது இடைவிடாத ஆதரவும், முழுமையான ஈடுபாடும் ஆகும். அவரது ஒத்துழைப்புக்கும் வழிகாட்டுதலுக்கும் தனது நன்றியறிதலையும் பாராட்டையும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மனப்பூர்வமாகத் தெரிவித்துக் கொள்வதாக

**விளையாட்டு விழா மலர்**

விளையாட்டு விழா மலரை மாண்புமிகு மத்திய இரயில்வே இணையமைச்சர் திரு சுரேஷ்கல்மாடி வெளியிட, மாண்புமிகு தமிழக சட்டப் பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா



**கொடி அமைப்பு உருவக்காட்சியில் 'ஜெயாவின் நெருப்புக் கணைகள்' என்னும் எழுத்துக்கள் வண்ணமுடன் பாய்ந்து வருகின்றன.**

அவர்கள் பெற்றுக் கொண்டார்.

மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் மற்றும் இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் ஆகியோர்களுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்களும் நினைவுப் பரிசுகள் வழங்கினார்கள். பின்னர், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் திரு வால்டர் ஐ. தேவாரம் அவர்கள், ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் இயக்குநர் திரு ஆர்.கே. சர்மா, பின்னணிப் பாடகர்கள் எஸ்.பி. பால சுப்பிரமணியன், மனோ, பாடகிகள் எஸ். ஜானகி, சுவர்ணலதா, சித்ரா, ஆகியோர் நினைவுப் பரிசுகளை மாண்புமிகு தமிழக அமைச்சர் களிடமிருந்து பெற்றார்கள்.

**தமிழக முதல்வருக்குப்பாராட்டு**

விழாவில், தலைமை விருந்தினராகக் கலந்துகொண்ட மாண்புமிகு மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சர் திரு மாதவராவ் சிந்தியா அவர்கள் பேசும்போது, இந்த விளையாட்டுப் போட்டி களைத் தமிழக அரசு வெகு சிறப்பாக நடத்தியிருக்கிறது. அதற்காக மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் காட்டிய ஈடுபாட்டைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ள தாகத் தெரிவித்தார். சென்னையில் மிகச் சிறந்த விளையாட்டு அரங்குகளும் மற்றும் வசதிகளும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் உருவாக்கப்பட்டுள்ளன. வருங் காலத்தில் அவைகள் இந்திய விளையாட்டுத் துறையினருக்கு மிகுந்த பயனளிப்பதாக அமையும் என்று அமைச்சர் நம்பிக்கைத் தெரிவித்தார்.

**போட்டிகள் நிறைவடைந்தன**

அடுத்த நிகழ்ச்சியாக, ஏழாவது தெற்காசிய விளை யாட்டுப் போட்டிகள் கடந்த பத்து நாட்களாகச் சிறப்பாக நடைபெற்று நிறைவடைந்ததைத் தெற்காசிய விளையாட்டுச் சம்மேளனத் தலைவர் திரு பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள் மரபுப்படி அறிவித்தார். கடந்த பத்து நாட்களாக எரிந்து கொண்டிருந்த விளையாட்டுச் சுடர் படிப்படியாகக் குறைந்து அணைந்தது. அப்போது அருகே இருந்த விளையாட்டுக் கொடி களும் படிப்படியாக இறக்கப் பட்டன.

தெற்காசிய விளையாட்டுச் சுடரை இந்திய ஆக்கி அணியின் தலைவர் திரு பர்கத் சிங்கும், விளையாட்டுக் கொடியைக் காவல்துறை அலுவலர் திரு பிச்சை முத்துவும் மேடைக்கு எடுத்துச் சென்று திரு சிவந்தி ஆதித்தன் அவர்களிடம் மரபுப் படி ஒப்படைத்தனர். அவை களை திரு சிவந்தி ஆதித்தன் அவர்கள், எட்டாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்த இருக்கும் நேபாள நாட்டின் பிரதிநிதி களாக வந்திருந்த அந்நாட்டின் இளைஞர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு பல்தான் குருங் அவர்களிடமும் நேபாள

## 8 தங்கம் வென்ற ராணாவுக்கு மாண்புமிகு முதல்வர் ரூ.1 இலட்சம் பரிசு



**தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் 8 தங்கப்பதக்கம் வென்று சிறப்பான சாதனைபடைத்த துப்பாக்கி சுடும் வீரர் திரு ஜஸ்பால் ராணாவைப் பாராட்டும் வகையில், தமிழக அரசின் சார்பில், ரூ.1 இலட்சம் ரொக்கப் பரிசை மாண்புமிகு முதல்வர் அவர்கள் 28.12.95 அன்று வழங்கினார். டெல்லியில் உள்ள ராணா துப்பாக்கி சுடும் விளையாட்டுப் பயிற்சி நிலையப் பெயரில் இந்தப் பரிசுத் தொகைக்கான காசோலை வழங்கப்பட்டது.**

ஒலிம்பிக் சங்கச் செயலாளர் திரு ஆர்.எஸ். ரானா அவர்களிடமும் வழங்கினார்.

### விளையாட்டுப் போட்டிப் பாடல்

மைதானத்தில் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்த மேடையில் விளையாட்டுப் போட்டியின் பாடலை இசையுடன் திரைப் படப் பின்னணிப் பாடகர்கள் திரு எஸ்.பி. பாலசுப்பிரமணியன், திரு மனோ, பாடகிகள் திருமதி எஸ். ஜானகி, திருமதி சித்ரா, செல்வி சொர்ணலதா ஆகியோர் இணைந்து பாடி னார்கள். பாடல் முடிவடைந்த வுடன் அனைத்து வீரர் வீராங் கனைகள் மைதானத்தை விட்டுக் கலைந்து பார்வையாளர்களிடம் விடை பெற்றுச் சென்றார்கள்.

### கலை நிகழ்ச்சிகள்

முதலாவது கலை நிகழ்ச்சியாகச் சிவப்பு மற்றும் வெள்ளைச் சீருடையணிந்த நூற்றுக்கணக்கான மாணவிகள், கைகளில் வெள்ளை நாடாக்களும், வெள்ளைநிற வளையங்களும், வெள்ளை நிறக் கயிறுகளும் கொண்டு ஒலிநயம் இணைந்த உடற்பயிற்சிகளை அனைவரும் மகிழச் செய்து காட்டினர். அடுத்து, கக்சர் என்ற மத்தியப்பிரதேசப் பழங் குடியினர் ஆடும் நடனத்தை அம்மாநிலத்திலிருந்து வந்திருந்த நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் ஆடினார்கள்.

சென்னையைச் சேர்ந்த 1,200 பள்ளி மாணவர்கள் வெள்ளைச் சீருடையில் வந்து, ஒலிக்கேற்ற படி நடனம் ஆடி அரங்கத் திலுள்ளோரை அசர வைத்தார்கள்.

### ஜெயாவின் தீக்கணைகள்

அடுத்தபடியாக, 'ஜெயாவின் தீக்கணைகள்' என்ற வீரசாகச நிகழ்ச்சியைத் தமிழ்நாடு காவல் துறையைச் சேர்ந்த ஆண் பெண் காவலர்கள் மோட்டார் சைக்கிள்களில் நிகழ்த்திக் காட்டினார்கள். முதலில் ஜெயாவின் தீக்கணைகள் என்று எழுதிய ஒரு பதாகையை மூன்று மோட்டார் சைக்கிள்களில் 6





வீராங்கனைகள் உயர்த்திப் பிடித்துச் சென்றார்கள். பின்னர், 12 பெண் காவலர்கள் மோட்டார் சைக்கிளில் நின்ற படியே, அனைவருக்கும் வணக்கம் சொல்லி சென் றார்கள். அந்த மோட்டார் சைக்கிள்கள் எல்லாம் அந்த விளையாட்டு வீராங்கனைகள் சொல்லியபடி தானாகவே ஓடிய அந்தக் காட்சிகள் ஆச்சரியத் தைக் கொடுத்தன. எதிரெதிராக ஏழு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுக்கொன்று மோதிவிடுமோ என்று அச்சத்தைக் கொடுத்த படியே இம்மியளவும் பிசகாமல் வெற்றிகரமாக ஓட்டப்பட்டன. அணியாக நின்று கொண்டும் ஒருவர் மீது ஒருவர் உட்கார்ந்து கொண்டும், ஒரு சிறிய பாறை கால் முளைத்து நடந்ததைப் போல நகர்ந்து அனைவரையும் கவர்ந்தார்கள். பின்னர், ஒட்டகம் போலவும் கோட்டைக் கதவுகள் திறப்பதுபோலவும் வந்து காட்டினார்கள். சுமார் 350 காவலர்கள் கோட்டைக் கொத்தள வடிவத்தைக் கொடுத்தும், 3 குழுவினர் தாமரைப் போன்ற தோற்றத்தை அளித்தும் பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தினார்கள்.

தீப்பந்தத்தைக் கொண்டு வந்த 300 காவலர்கள் தீப்பந்தத் தால் நெருப்பு எழுத்துக்களை உருவாக்கி அனைவரையும் மகிழ்ச்சியில் திளைக்க வைத்தனர்.

கிட்டத்தட்ட 9 வகையான சொற்களைத் தீப்பந்தங்களைக் கொண்டு வடிவமைத்துக் காட்சியாக்கினர். அவைகளில் ஏழு நாடுகளின் பெயர்களும், வணக்கம் மற்றும் Thank You போன்றவையும் அடங்கும்.

**வாண வேடிக்கை**

கிட்டத்தட்ட அரைமணி நேரத்திற்கு மேலாக வானத்தில் மின்னும் நட்சத்திரங்களையும், மின்னலுடன் கூடிய இடி முழக்கத்தையும் செயற்கையாகக் கொடுக்க முடியுமா என்றால், அது முடியும் என்று முயற்சித்த வாண வேடிக்கை நிகழ்ச்சி அனைவரின் மனங்களிலும் நீங்காத இடத்தைப் பெற்று விட்டன.

பார்வையாளர்கள் கலைந்து சென்றபோது இவ்வளவு பெரிய சாதனையைச் செய்துகாட்டிய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் நேரில் கலந்துகொள்ள இயலாமல் போய்விட்டதே என்ற வருத்தம் அனைவர் முகத்திலும் தெரிந்ததைக் கவனிக்க முடிந்தது.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**மா. அசோகன்**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927




தூய
பட்டு

தூய
சரிகை





ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

HTA.7556.9

தமிழரசு
Licence No.TN/MS(C)/PP-23



